
FEB 2018

# The Common SENSE



பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம்–அமெரிக்கா

**Periyar Ambedkar Study Circle – America**

"பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் - அமெரிக்கா" அமைப்பின் "The common sense " மாத இதழின் வாசகர்களுக்கு அன்பு வணக்கங்கள் !

காதலர் தினம் பிப் 14 , எப்போதும் போல் இந்த ஆண்டும் இளைஞர்கள் நடுவில் வரவேற்பை பெற்றது. வழக்கம் போல மதங்களின் பெயரால், நாடகக் காதல் என்றும் , லவ் ஜிகாத் என்றும் அடிப்படைவாதிகள் பிரச்சனைகளை கிளப்பினாலும், அதனை எதிர்கொண்டு மக்களிடம் பரப்புரை செய்யப்பட்டது . இப்போது தமிழ் நாட்டில் ஆர்எஸ்எஸ் மறைமுகமாக, கொல்லைப்புறம் வழியாக ஆள்கின்ற காரணத்தினால் சில இடங்களில் காதலர் தினக் கொண்டாட்டத்திற்கு காவல் துறை அனுமதி வழங்கிடவில்லை. காதல் என்பது இயற்கையான உணர்வு, அதை மதம், ஜாதி இவற்றைக் கொண்டு தடை செய்திட முடியாது.அதுமட்டுமல்லாமல் ஜாதியை ஒழிப்பதற்கு காதலுக்கு ஒரு பெறும் பங்குள்ளது என்று பகுத்தறிவாளர்களும், முற்போக்காளர்களும் ஆணித்தரமாக நம்புகின்றனர்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் ஜாதி மறுத்த காதல் மணங்களே ஜாதி அமைப்பை உடைக்கும், மற்றும் குருதி கலப்பிற்கு அத்தகைய வல்லமை உள்ளது என்கிறார், தந்தை பெரியார் அவர்களும் சாதி மறுத்த காதல் திருமணங்கள் சாதிய கட்டமைப்பை உடைக்கவல்லது என்று அதனை பெரிதும் வரவேற்கிறார். அதே வேளையில் அன்பு, ஆசை, நட்பு, பாசம் போன்ற ஒன்றாகக் காதலைக் கருத வேண்டுமே தவிர காதலுக்கு பூசப்படும் புனித பிம்பத்தை என்றும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த தெளிவினை, எதையும் பகுத்தறியும் உணர்வினையும் , பெரியார் -அம்பேத்கர் படிப்பு வட்டம் The Common sense இதழாளர்களுக்கு வழங்கிடவே முயற்சி செய்கின்றது.

ஜனவரி 14, தமிழ்ப்புத்தாண்டு அன்று வெளியான முதல் 'thecommonsense' இதழுக்கு பேர் ஆதரவிளித்த அனைத்து தோழர்களுக்கும் வாசகர்களுக்கும் குழுவினரின் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இந்த மாத இதழுக்காகவும் நம்மை வாழ்த்தியும் அட்டைப்படம் வழங்கிய ஓவியர் மருது அவர்களுக்கு நன்றி. பெரியார் விருது பெற்ற அனைத்து ஆளுமைகளுக்கும் இதழின் சார்பாகவும், பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் - அமெரிக்கா சார்பாகவும் நல்வாழ்த்துகள்.

சங்கரமட விஜயேந்திரன் ஒரு பொது நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்ட பொது எழுந்து நிற்காமல் அவமதித்ததை கண்டித்து கடந்த ஜனவரி 27, பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் - லண்டன் குழு சார்பாக இந்தியா தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, பிப்ரவரி 04, அன்று நியூ ஜெர்சி மாகாணத்தில் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் - அமெரிக்கா சார்பில் கண்டனக்கூட்டம் நடைபெற்றது.

பெரியாரும் அண்ணலும் வகுத்துக்கொடுத்த பாதையில் நேர்மையாகவும், வெளிப்படையாகவும், தன்னாட்சியுடனும் தொடர்ந்து செயற்பட, தங்களின் மேலான ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்கிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். தங்கள் படைப்புகள், கருத்துகள், விமர்சனங்கள், விளம்பரங்களை 'thecommonsense.pasc@gmail.com' மின்னஞ்சல் வாயிலாகப் பகிர்ந்துகொண்டு மேலும் ஊக்குவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வாழ்க தந்தை! வாழ்க அண்ணல்!

வளர்க பகுத்தறிவு! செழிக்க மனிதநேயம்!

**ஆசிரியர் குழு.**



# திராவிடர் கழகம்


தலைமை நிலையம்: பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி.சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007.
தமிழ்நாடு, இந்தியா. தொலைப்பேசி : 91-44-26618161,62,63 தொலைப்பதிவி : 91-44-26618866
மின் அஞ்சல் : dkheadquarters@gmail.com இணையதளம் : www.dravidarkazhagam.org

நிறுவனத் தலைவர்
**தந்தை பெரியார்**

தலைவர்
**கி.வீரமணி,** எம்.ஏ.,பி.எல்.,

நாள் : 13.2.2018


## தந்தை பெரியார் - டாக்டர் அம்பேத்கர்

# ஒரே நாணயம் – இரண்டு பக்கங்கள்!

*இந்தியாவின் சமூகப் புரட்சி வரலாற்றில், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புரட்சியாளர்கள் தெற்கே தந்தை பெரியார்; வடக்கே டாக்டர் 'பாபாசாகேப்' அம்பேத்கர்!*

*இவர்கள் இருவரும் லட்சியப் பயணத்தில் - கொள்கைப் போராட்டங்களில் இரு இணை கோடுகள்! தத்துவங்களில் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்!!*

*இவர்களுடைய ஒரு பொன்மொழியை எடுத்தக் கொண்டு, அதனடியில் 'தந்தை பெரியார்' என்று போட்டாலும், 'டாக்டர் அம்பேத்கர்' என்று மாற்றிப் போட்டாலும் மாறுபாடே இல்லாத அளவுக்கு ஒரே வகைச் சிந்தனையாளர்களின் கருத்துக் கருவூலங்களாகவே அவை மிளிறும்!*

*டாக்டர் அம்பேத்கர் அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்திலிருந்து இந்தியாவிற்கு - தனது சொந்த மாநிலமான பம்பாய்க்குத் திரும்பிய பின், 'தன் பிள்ளை,*



*தன் வீடு, தன் மக்கள்' என்ற சின்னதோர் கடுகு உள்ளத்தோடு சுயநல வாழ்வு வாழாமல், ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களின் சமத்துவத்திற்கும், சம உரிமைக்கும், சம வாய்ப்புக்கும் திட்டமிட்டே செயலாற்ற அமைப்புகளை உருவாக்கினார்.*

*'குரலற்ற(ஊமையர்களின்)வர்களின் குரல்' ('மூக் நாயக்) என்று மராத்தி மொழியில்*

அவர் நடத்திய ஏட்டில், 1924இல் தெற்குத் திருவிதாங்கூர் ராஜ்யத்தில் இருந்த 'வைக்கம்' என்ற ஊரில், உள்ள மகாதேவர் கோயிலின் நான்கு வீதிகளிலும், ஒடுக்கப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களாகிய "ஈழவர்கள், தீயர்கள், புலையர்கள்" என்ற 'கீழ் ஜாதியார்' தெருக்களில் நடக்கக் கூட உரிமையற்று இருந்த நிலையில், அதனை எதிர்த்து அங்கிருந்த அன்றைய காங்கிரஸ் தலைவர்கள் 'சத்தியாகிரகத்தை - மறியலை'த் துவக்கினர்; அவர்களை அவ்வரசு கைது செய்து சிறையில் அடைத்து விட்டனர்; அவ்வறப்போரினை ஒடுக்கி விட்டோம்

> மகாத்மா அவர்களே, நாயும், பன்றியும், கழுதையும் சுதந்திரமாக அத்தெருக்களில் நடமாடுகின்றன. ஆனால், ஆறறிவு படைத்த நம் மக்கள் ஜாதி இழிவு - பிறவி பேதம் காரணமாக நடமாட முடியாத நிலை வெட்கப்படக் கூடியதல்லவா?



என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட நிலையில் தான், தந்தை பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் என்ற நிலையில், சிறையில் வாடியவர்களின் கடிதம் கண்டு, உடனே அங்கே சென்ற வைக்கம் சத்தியாகிரகத்தை முன்னெடுத்துச் சென்று தொடர் போராட்டமாக்கினார்.

பெரியார் இருமுறை கைது; தனது துணைவியார் நாகம்மையார், தங்கை கண்ணம்மையார் உட்பட அப்போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

இந்திய சமூகப் புரட்சி வரலாற்றில் இப்போராட்டம்தான் முதல் பெரும் போராட்டம். மனித உரிமைகளைப் பெறுவதற்கு நடத்தப்பெற்ற போராட்டம்.

1924இல் அண்ணல் காந்தியார், தந்தை பெரியாருக்கு எழுதிய கடிதத்தில், "நீங்கள் ஏன் கேரளாவிற்குச் சென்று போராடுகிறீர்கள்" என்று எழுதி, தமிழ்நாடு திரும்பச் சொன்னார் - மேல்ஜாதி நம்பூதிகளின் புகார்களை நம்பினார்.

தந்தை பெரியார் அவர்களோ, "மகாத்மா அவர்களே, நாயும், பன்றியும், கழுதையும் சுதந்திரமாக அத்தெருக்களில் நடமாடுகின்றன. ஆனால், ஆறறிவு படைத்த நம் மக்கள் ஜாதி இழிவு - பிறவி பேதம் காரணமாக நடமாட முடியாத நிலை வெட்கப்படக் கூடியதல்லவா? எனவேதான் நான் இப்போராட்டத்தை - கேரள தலைவர்கள் விருப்பத்தை ஏற்று தொடருகின்றேன் என்று கூறி வீரியத்துடன் நடத்தி வெற்றி பெற்று, 'வைக்கம் வீரர்' ஆனார்.

தந்தை பெரியார்தம் இப்போராட்டத்தினை அறிந்த டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அவர் அப்போது நடத்திய 'மூக் நாயக்' ஏட்டில் பின்வருமாறு எழுதினார் என்ற செய்தியை அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்று நூலாசிரியர் தனஞ்செய்கீர் அவர்கள் பதிவு செய்துள்ளார்.

*"...But the most outstanding event of the year (1924) concerning the struggle of the Depressed Classes was the Satyagraha or the passive resistance sponsored by Ramaswami Naicker, a Non-Brahmin leader at Vaikom in the Travancore State for vindicating the rights of the Untouchables to use a certain road to which they were forbidden entry. Its moral pressure and the spirit of righteous assertion had a tremendous effect, and the orthodox Hindus, for a while, regained their civic sense and sanity, and the road was thrown open to the untouchables"*

*... Ambedkar was watching these developments very carefully. He referred to the Vaikam struggle, a few months later, very touchingly in one of his editorials, on the eve of the Mahad satyagraha. These were notable events.*

இதன் தமிழாக்கம்:

".... மிகவும் குறிப்பிடத்தக்க போராட்ட நிகழ்வொன்று 1924-ஆம் ஆண்டில் நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள வைக்கத்தில் பார்ப்பனர் அல்லாதார் தலைவரான ராமசாமி நாயக்கர் நடத்திய போராட்டம்தான் அது. வைக்கத்தில் உள்ள கோவிலைச் சுற்றியுள்ள சாலைகளில் தீண்டத்தகாதோர் நுழையக் கூடாது எனும் வழக்கத் தினை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமாகும் அது. போராட்டம் ஏற்படுத்திய தார்மீக தாக்கமும், சரியானது செய்திடப்படவேண்டும் என்ற நினைப்பும் வைதீகப் போக்குடைய இந்து மதத்தவரிடம் ஒரு மாறுதலை ஏற்படுத்தியது. குடிமைப் பொறுப்பும், புத்திசாலித்தனமும் இணைந்து

உணரப்பட்டதால் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகளில் தீண்டத்தகாதோர் நடந்துசெல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

"... அம்பேத்கர் இத்தகைய நிகழ்வுகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வந்தார்.



மகத குளம் - இறங்கும் போராட்டத்திற்கு சில மாதங்களுக்கு முன்பு தமது பத்திரிகையில் வைக்கம் போராட்டத்தைப் பற்றி மிகவும் உருக்கமாக மனதைத் தொடும் வகையில் தலையங்கம் தீட்டியிருந்தார். இவைகள் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாக அமைந்தன."

அதுதான் கருத்தியல், கொள்கை, லட்சியங்கள் மூலம் பெரியார் பற்றிய புரிதலும், நேரில் சந்திக்காவிட்டாலும் லட்சிய ஒருங்கிணைப்பான அருந்தோழர்களாக இருவரையும் மாற்றிய முதல் கட்டமாகும்!

இரண்டாவது, டாக்டர் அம்பேத்கர் பஞ்சாப் - லாகூரில் 'ஜாட்பட் தோரக்'




மண்டலில் ஜாதி ஒழிப்பு பற்றிப் பேச அவ்வமைப்பினர் அழைத்து, அவர்களது மாநாட்டிற்கே தலைமை தாங்க அழைத்தனர்.

டாக்டர் உரையை ஆங்கிலத்தில் தயாரித்து உரையாற்ற இருந்த நிலையில், அவரது உரையை முன்கூட்டியே படித்த வரவேற்புக் குழுவினர், அதில் ஹிந்து மதம் - கடவுள் - சாஸ்திரங்கள் பற்றிய குறிப்புகள் - கண்டனங்களை நீக்கிவிட்டு சொற்பொழிவாற்றக் கேட்டனர்.

சுயமரியாதை உணர்வு பொங்கிய நிலையில் அம்பேத்கர் மறுத்துவிட்டு, தானே அதை ஒரு தனி நூலாக 'ஹnni-hடையவவிடிn டிக ஊயளவந' என்று சிறு நூலாக வெளியிட்டார் 1934இல். செய்தி அறிந்த தந்தை பெரியார், அதனை டாக்டரிடமிருந்து கேட்டுப் பெற்று தமிழில் மொழிபெயர்த்து, 4 அணா விலையில் பல்லாயிரக்கணக்கில் பரப்பினார்.

அதன்மூலம் தமிழ்நாட்டில் முதன்முறையாக டாக்டர் அம்பேத்கர் புகழ், பெயர் பரப்பக்காரணமாக அமைந்தார்.

பிறகு குஜராத்தி போன்ற மொழிகளில் அது மொழிபெயர்க்கப்பட்டது. என்றாலும் முதல் மொழிபெயர்ப்பு தந்தை பெரியார் வெளியிட்ட 'ஜாதியை ஒழிக்க வழி' என்ற தலைப்பில் டாக்டரின் உரையே முதன்முதலில் வெளியானது!

இன்னமும் சந்தித்துக் கொள்ளவே இல்லை இருவரும்!

1940இல் தந்தை பெரியாரை சந்திக்க டாக்டர் விருப்பத்திற்கேற்ப, பம்பாய் தோழர்களின் முயற்சியால்தான் அச்சந்திப்பு நிகழ்ந்தது. பிறகு 1944இல், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் - தந்தை பெரியார் சந்திப்பு. இப்படி குறைந்தது 4 அல்லது 5 முறை இருவரும் சந்தித்து கருத்துக்களைப்பரிமாறிக்கொண்டனர். இறுதியாக 1954இல் பர்மாவில் (இன்றைய மியான்மரில்) உலக புத்தர் மாநாட்டில் இருவரும்சந்தித்து நீண்ட நேரம் கருத்துப் பரிமாற்றம் செய்த நிலையில்தான், 1956 அக்டோபர் 14இல்நாகபுரியில் - புத்த நெறியை டாக்டர் அம்பேத்கர் தழுவி, இந்துவாக நான் ஒருபோதும் சாகமாட்டேன்; சமத்துவம், சுயமரியாதை உள்ள மனிதனாகவே வாழ்ந்து, சாவேன் என்று கூறிய பிரகடனத்தை நடைமுறைப்படுத்தி உயர்ந்தார்!

தந்தை பெரியார் அவர்களுடன் பர்மாவில் நீண்ட நேரம் கலந்து ஆலோசித்த நிலையில், டாக்டரிடம் தந்தை பெரியார் கூறினார், "நீங்கள் பல லட்சம் தோழர்களுடன் சென்று பவுத்தத்தைத் தழுவுங்கள். அது வரலாற்று நிகழ்வாகும்' என்று கூறிய யோசனையை செயல்வடிவத்தில் காட்டினார் டாக்டர்!

ஹிந்து மதம் என்ற வர்ணாசிரம மதம்தான் ஜாதிக்கு - தீண்டாமைக்கு ஊற்று; இந்து மதக் கடவுள்கள் குறிப்பாக பிரம்மா, கிருஷ்ணன் ஆகியோர் கூற்று என்று மனுதர்ம சாஸ்திரத்திலிருந்தும், பகவத் கீதையிலும் கூறப்பட்டிருப்பதை இரு புரட்சியாளர்களும் ஒரே குரலில் வெவ்வேறு இடங்களில் கண்டித்து முழங்கினர்.

மனுஸ்மிருதியைக் கொளுத்தும் போராட்டங்களை இருவரும் வடக்கே, தெற்கே நடத்தினர்.

வைக்கம் சத்தியாகிரகப் போராட்டம் - மகத் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம் - நிகழ்த்தினார்கள். 1924இல் வைக்கம். 1927இல் மகத் சத்தியாகிரகம்.

இப்படி ஏராளம்.

இந்திய அரசியல் சட்டத்தை வகுக்க, ஏற்படுத்தப்பட்ட வரைவுக்குழுவில் (இறுதி வடிவில்கூட) ஆறு பேர் குழுவில் 4 பேர் பார்ப்பனர்கள், ஒருவர் தாழ்த்தப்பட்டவர், ஒருவர் முஸ்லிம். 4 பேர்களும் டாக்டரை ஒரு 'வாடகைக் குதிரையாக்கி' (முயஉம) பயன்படுத்தினர். அவரே, பிறகு மாநிலங்கள் அவையில் வேதனையுடன் கூறி, "நான்தான் அரசியல் சட்டத்தை எழுதியதாகக் கூறுகிறார்கள்; நான் அதற்குத் தீ வைக்கவும் தயாராக இனி முதல் ஆளாக இருப்பேன்" என்று நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் (ராஜ்ய சபை) 2.9.1953இல் முழங்கினார்!

தமிழ்நாட்டில் 1957இல் ஜாதியைக் பாதுகாக்கும் அரசியல் சட்டத்தை தீ வைத்துக் கொளுத்தும் போராட்டம் நடத்தி 3,000 பேர் கைதாகி, 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அனுபவித்தனர். உள்ளே நால்வரும், வெளியே 14 பேரும் உயிர்த்தியாகமும் செய்தனர்!

இப்படி எத்தனை எத்தனையோ ஒற்றுமைகள். ஜாதி ஒழிப்பு, வேத - பார்ப்பன - ஹிந்துமத எதிர்ப்பு - பெண்ணடிமை ஒழித்து, பெண்ணுரிமையைப் பேணுதல் - எல்லாவற்றிலும் ஒரே கருத்து.

இந்திய சமூகத்தின் சமூக விடுதலைக்கு இந்த இரண்டு கலங்கரை விளக்குகளின்

வெளிச்சத்தில்தான் ஜன சமுகத்தின் - சமூக மாற்றக் கப்பல்கள் பயணிக்க வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் - மாணவர்கள் இதனைப் புரிந்துகொடனர்; இந்த இரண்டு

தத்துவக்கர்த்தாக்கள் - புரட்சியாளர்களின் கருத்துக்களை உள்வாங்கி உலகம் முழுவதிலும்

இவர்களின் நூல்களுக்கு ஏற்பட்டுள்ள

**"மகத குளம் - இறங்கும் போராட்டத்திற்கு சில மாதங்களுக்கு முன்பு தமது பத்திரிகையில் வைக்கம் போராட்டத்தைப் பற்றி மிகவும் உருக்கமாக மனதைத் தொடும் வகையில் தலையங்கம் தீட்டியிருந்தார்."**



'கிராக்கியும்' அதனை அமிழ்து, அமிழ்து என்று உண்டு, ஜாதி - தீண்டாமை ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்புக்கான அறப் போர்க்களம் நோக்கிப் புறப்பட ஆயத்தமாகி விட்டார்கள் என்பது நமது நம்பிக்கை ஒளியாகும்!

வாழ்க பெரியார்! வாழ்க அம்பேத்கர்!

வரும் அவர்கள் விரும்பிய புது உலகம்!



(கி.வீரமணி)
தலைவர், திராவிடர் கழகம்





PRAKASH RANGARAJU

# Being Two-Faced

Large population of Indians living in the United States of America seem to take potshots at the right-wing politics that's dictating American politics and policy making. They detest that religion-based, right-wing conservatism EVEN has a place in politics in this advanced age and time.

**Tea Party & KKK -** When Tea Party started emerging as the right wing rural mouth piece in America, many Indians who lived here stayed as far as possible from the Tea Party. When the Sarah Palins and the Michelle Bachman's opened their mouths, many Indians cringed and couldn't relate to anything they ever said. In plain and simple words,




> *What makes us Indians to be so easily and naturally Hypocrites.*

their discourse was religious stupidity and white supremacist, for many Indians who live here. They couldn't stand the hatred and religious conservatism that even defies fundamental science like evolution theory. The vitriol of white supremacy that's carried through Tea Party, KKK are perceived and criticized as the very opposite of the "values" of an Indian living in America.

**Red States Vs. Blue States –** During the past election cycles, America clearly looked like a country divided in Red States vs Blue States. It didn't matter who is running, Republicans won Red States and Democrats won Blue States. Elections were merely a formality in those states. The few toss up states is where the campaigns and events happened. Indians seemed to be proud of the fact that the red state / blue state concept didn't seem to exist in the supposedly "United" India.

The "Other" Face:

The same Indians, when it comes to Indian politics, seem to take a softer and favorable stand to the Right-Wing Hindu Conservative Politics that's growing rampantly in India like Cancer. The mouths that took potshots at the Right-Wing Politics in USA can now be heard singling praises of the same brand of politics followed by the Hindutva zealots of RSS and Sangh Parivar.


**RSS & Sangh Parivar –** RSS ideology is very similar to Tea Party, establishing nationalism and religious conservatism as the "only rhetoric" of politics in India. Sangh Parivar spreads Hindu Supremacy just like KKK is planting the seeds of hatred and spreading White Supremacy. The shocking trend of Indians, those who are especially from the North, is the dichotomy in their ideology in opposing what is happening in the USA and supporting what's transpiring in India blindly.

**Saffron States Vs. Others –** The majority of North India has now become Saffron States, no different than the red states of USA. Indians who denigrated and vilified the concept of Red States are more and more accepting of the Saffron State reality of North India. The underlying hypocrisy of being Indians, the majority from the north, stand exposed with their two-faced approach to being against one system in one country but supporting the EXACT same system in another country.

What makes us Indians to be so easily and naturally Hypocrites?

- We admonish the Slavery and the Segregated school systems that used to be in America and we supported the champions of civil right movement, BUT we ignore and gently go past the truth that Hinduism denied education for 95% of the population in the name of Casteism. Isn't segregated school system slightly better than no-education at all, as it was under the Hindu – Sharia laws?
- As of a 2011 study, over 90% of Hindu marriages in India were based on caste. We deride in public forums that caste system is heinous to the society, BUT we make the most important decision of our lives based on caste.
- We are against discriminative and xenophobic policies of the right-wing politics as Indians in USA and support the thoughts of liberalism and progressive ideas, BUT we enable the RSS brand of politics being discriminative to Minorities and Xenophobic to people of other religion.

What are we missing as a society? Where is our moral compass? We are teaching our children the "purity" of being a Hindu, gently ignoring the many perils and evils that happened in the name of the religion and still happening in the name of casteism, prevalently.




Take one honest moment to think – Aren't we lying through our teeth, to our children, by only giving them the one-sided story? Aren't we being deceitful and dishonest to our own children, by preaching one thing and practicing the opposite? What do we call ourselves, other than "hypocrites", to our own children and family? How low we can get as humans? Why is it so easy to be TWO-FACED and HYPOCRITCAL under the current values taught by our system and society?

Why do Indians have one ideology for the country they live and a completely opposite ideology for the country they were born? Are we Split Personalities to have conflicting spells of thoughts for different geographies? Isn't it important to stand for "What is RIGHT" over "What is CONVENIENT"?

It is that moment and time now, for every Indian to introspect. Ask yourself honestly one question, "Am I a hypocrite?".

The moment of truth may even hurt a little: "Possibly". By accepting the truth, you just planted a seed for Common Sense and Rationality!

● அருள்மொழி பழனிசாமி

# குடும்ப இஸ்திரி

குடும்ப இஸ்திரிகளின் கதை எல்லாமே ஒரு வகையில் குத்துவிளக்கு கதைகள்தான் என்றாலும், சில குத்துவிளக்குகள் குத்தவும் செய்கின்றன என்பதால் ஆண்களின் நலனை முன்னிட்டு எழுதப்படும் கட்டுரை ஆகும். புரிந்து பயன் பெறுக.

இது ஒரு ஒற்றை நோக்கம்: தன்னால் இயலாத இனப்பெருக்கத்தை தனதாக்கிக்கொள்வது. எல்லா உயிரினங்களிலும் பெண் தான் யாருக்கு இனப்பெருக்கம் செய்யணும்னு முடிவெடுக்குது. ஆனா நம்முடைய patriarchy ல பெண் நிலத்தைப் போல வாரிசை விளைவிக்கும் ஒரு பொருள். அதை சுதந்தரமாய் விட்டால் தகுதியானது தான் தப்பும். அதனால அவங்களுக்குள்ள ஒரு அண்டர்ஸ்டாங்டிங்.



இருக்குற நிலத்தை ஆளுக்கு கொஞ்சமா பங்குபோட்டுக்கலாம்ங்குறது முடிவு. ஆனா, நிலத்தை போல பெண் ஜடம் இல்லியே, புத்தி யோசிக்குமே, என்ன செய்யலாம்? அதை - அதாவது தன்னைத் தானே பங்கு வைப்பதை, அவங்களே போட்டி போட்டுக்கிட்டு செஞ்சா எவ்ளோ நல்லா இருக்கும்? அதுக்கு தான் சாதி பைரவர்களுக்கு பயிற்சி கொடுப்பது போல, மூளையை மழுங்கடிக்கும் பயிற்சி பிறந்ததில் இருந்தே கொடுக்கப்படுகிறது. அந்த பயிற்சிகளில் ஒன்று தான் நல்ல குடும்ப இஸ்திரியாய் திகழ்வது எப்படி என்கிற அறுநூத்தி இருபதாவது ஆய கலை.



நல்ல குடும்ப இஸ்திரியாய் இருப்பதே தன் தலையாய கடமை என்று முதலில் நாம் நம்ப வேண்டும். ஏன் நம்ப வேண்டும்? - அப்படியெல்லாம் கேள்வி கேட்டா வாயிலேயே போடு. குடும்பம் ஒரு புனிதமான நிறுவனம். அதுல இருக்கிற ஆண்கள் முதலாளிகள். பெரிய முதலாளி, நடு முதலாளி, சின்ன முதலாளி, குட்டி முதலாளி, ஆறு மாச கருவாக இருக்கும் உள்ளிருப்பு முதலாளி வரை டிசைன் டிசைனாக இருக்கும். தொழிலாளிகளும் டிசைனுக்கு தக்க பார்டர் வைத்து பளபளப்பாய் இருப்பார்கள். இந்த அமைப்புக்கு ஒரு தூணாக செயல்படும் பெரிய தொழிலாளி தான் நம்ம குடும்ப இஸ்திரி. அவளை சில நேரங்களில் பெரிய முதலாளி கூட கண்ட்ரோல் பண்ண முடியாது. அந்த நேரங்களில் அவளை இருக்குமிடத்தில் பெருமையுடன் இருக்க வைக்க சமூகம் தனது நூறு மூக்கணாங்கயிறுகளை கொண்டு இழுத்து நிறுத்தும்.

> அவளை இருக்குமிடத்தில் பெருமையுடன் இருக்க வைக்க சமூகம் தனது நூறு மூக்கணாங்கயிறுகளை கொண்டு இழுத்து நிறுத்தும்.

புனிதம் மட்டுமல்ல, தீட்டும் இஸ்திரிகளுடையது தான். அது கற்பும் விபச்சாரமும் போல. ஒன்னு இல்லன்னா இன்னொன்னு இல்லே. உனக்கு ரெஸ்டு கொடுக்குறோம் பேர்வழின்னு எல்லாம் யாரும் ஓரமா உக்கார வைக்கல. ஓரமா உக்காந்தாலும் வேல செஞ்சி தான் அகனும். அப்புறம் ஏன் காட்ல இருந்தப்ப தனியா உக்கார வச்சாங்க? மோப்பம் புடிச்சி வர விலங்கு அந்த ஒத்த பொம்பளையத் தூக்கிட்டு போயிரும். குரூப்பு எஸ்கேப். அதை எப்படி ஏத்துக்க செய்யுறது? சடங்கு வச்சா எல்லாரும் போனும்ல? அப்ப தீட்டாக்கிருவம். ஓவர். கற்பும் விபச்சாரமும் எப்படி ஒன்றில்லாமல் மற்றொன்று அமையாதோ, புனிதமும் தீட்டும் ஒன்றில்லாமல் மற்றொன்று அமையாது.

இந்த குடும்பத்துக்கு ஏன் ஒரு இஸ்திரி தேவைப்படுகிறது? இல்லன்னா குடும்பம் சுருங்கிப்போகும். ஒரு கட்டத்தில் இல்லாமல் போகும். கருப்பை தான் உற்பத்திக்கு தேவை. அதை தனியாய் கைக்கொள்ள முடிந்தால் எப்போதோ பெண் இனம் காணாமல் போயிருக்கும். அதை வைத்து மெயின்டெயின் பண்ண அந்த உடல் இருந்துதான் ஆக வேண்டும்.. அதை எப்படி பயன்படுத்தலாம்? வெட்டியா தானே இருக்கிறது? நிறுவனத்துக்கும் முதலாளிகளுக்கும் வேலை செய்யலாமே? உடல் இருக்கும்வரை செய்ய வேண்டும். தினமும் செய்ய வேண்டிய உணவை சமைக்கும் வேலை ஓசியில் வந்தமர்ந்து இப்படித்தான். இது ஒரு வெகுமதியுடன் கூடிய ஒரு அடிமை முறை.

வீட்டிலும் வெளியிலும் ஓசியில் செய்ய வேண்டிய வேலைகளை குடும்ப இஸ்திரிகள் ஒன்றுகூடி மகிழ்ச்சியாய் செய்வதை பார்த்திருப்போம். உதாரணத்துக்கு ஒரு சிறிய குடும்ப விழாவில் காய்கறி வெட்டுவது முதல் சமைப்பது வரை சொந்தக்கார குடும்பங்களின் இஸ்திரிகள் எல்லாரும் இழுத்து போட்டுக்கொண்டு செய்வார்கள். அங்கே ஒரு இஸ்திரி ஓரமாய் உக்காந்து புக்கு படிச்சிட்டு இருந்தாலும் அதை அடித்து இழுத்து வர ஒரு அல்லக்கை இஸ்திரி ரெடியாய் இருக்கும். அது ஒரு இன்பமான பொழுதுபோக்கு. நாங்கல்லாம் வெங்காயம் உரிக்கிறோம்.. உனக்கு என்ன படிப்பு இந்த நேரத்துல? இப்படியாக உள்ளேயே ஒரு தலைமை அடிமையும் அதுக்கு ஒரு சைடு அடிமையும் உருவாகிறார்கள். முதலாளிக்கு நல்லது இல்லையா? அதுக்கு அப்பப்போ சிறு பரிசு போன்ற பிஸ்கட்டுகளும் கிடைக்கும்.

இதுல முக்கியமான இடம் என்னன்னா, அந்த இஸ்திரி, தன முதலாளியை தானே தேர்ந்தெடுக்க முடியாது. அந்த நிறுவனம் தன் எம்பிளாயியை ஒரு பதவி உயர்வுடன் இன்னொரு நிறுவனத்துக்கு டிரான்ஸ்பர் பண்ணும். பதவிக்கு அதிகாரங்களும் அதிகம், பொறுப்புகளும் அதிகம். அடுத்த முதலாளியை அல்லது தொழிலாளியை உருவாக்கும் மீடியேட்டர், மற்றும் தலைமை அடிமை. ஆனால், இந்த நிறுவனத்தை காக்க பாடுபட வேண்டும். முதலாளியை உருவாக்குதல் நல்ல காரியம், தொழிலாளியும் பாதகமில்லை. நிறுவனம் வளர தொழிலாளி வேண்டுமல்லவா?

நிறுவனம் செயல்பட சிறிய அமைப்பாய் இருத்தல் நலம். ஆனால் ஒரு தனித்த சுள்ளியை உடைப்பது எளிதல்லவா? மொத்தமாய் கட்டியது தான் நம்ம சமூகம். கட்டியது எது? மதம் என்னும் கண்ணுக்கு தெரியாத கயிறு. அதில் முதலாளி, தொழிலாளி, அல்லக்கை, அடிமை எல்லாம் அடக்கம். ஆனால் அங்கும் கண்ணுக்கு தெரியாத சிந்தனையை உணர்வால் பின்னி அழகாய்க் கட்டி வைப்பது இஸ்திரிகளின் வேலை தான். உதாரணத்துக்கு, சடங்குகள் எல்லாமே இஸ்திரிகளை மையமாக வைத்து கூட்டாய் சேர்ந்து கும்மி அடிப்பதாய் இருக்கும். அதிலும் அவள் வளமான குட்டி போட்ட பாலூட்டியாய் இருத்தல் நலம். ஆணை மையமாய் வைத்து செயல்படுவது கொள்ளி வைத்தல், கருமாதி தவிர வேறு இருப்பதாய் தெரியவில்லை. அது கூட இந்த உடலுக்கு நான் தான் ஓனர் என்பதைப் பறைசாற்றுவதாய் இருக்கிறது. இருந்தாலும் செத்தாலும் முதலாளிகள் மாறுவதில்லை. மத சடங்குகள், கட்டுப்பாடுகள் முக்காலே மூணுவீசம் பெண்ணின் இனப்பெருக்க உரிமையை மையப்படுத்தியே இருக்கின்றன. ஆணுக்கு கற்பு தேவை இல்லை. முதலாளிகள் விசுவாசத்துடன் இருக்க தேவை இல்லை. கடவுள் யாருக்கும் பக்தியாய் இருக்க தேவை இல்லை.

> ஓவராய் சூட்டை குறைத்தால் இஸ்திரி பேட்டி நிறுவனத்துக்குப் பயன்படாது. தானே முடிவெடுக்கும் இஸ்திரிப்பெட்டி இருந்தென்ன லாபம்?



இஸ்திரிகள் மட்டுமே இனப்பெருக்கம் செய்ய முடியும். சாதா பெண் செஞ்சா அப்ரூவல் கிடைக்காது. அப்ரூவல் வாங்க ஒரே வழி இஸ்திரியாய் மாறுவதே.

சரி, இஸ்திரிப்பெட்டி ரொம்ப சூடாகிட்டா என்ன செய்யுறது.? இணை துணை ஈகுவாலிட்டின்னு ஏதாவது ஒன்னு இருக்குற மாதிரியே நடிக்கணும். இஸ்திரியோட வோல்டேஜ் கண்ட்ரோல்ல தான் இருக்கு. அதனால ஏற்கனவே இருக்குற கில்ட்டி பீலிங்கை உசுப்பேத்தி, நீ சொன்ன ஒரு ஐட்டமுமே இல்லேயேடா அப்படின்னு கேக்குறத மைண்டோடவே நிறுத்திறனும்.. வெளிய வந்தாதான் பிரச்சினை. அவள் யோசிப்பதோ தனக்கு தானே பேசிக்கொள்வதோ அவுட் ஆப் சிலபஸ்.

முதலாளிகள் தரப்பில், இதுபற்றி விவாதங்கள் கிளம்பும்போது - அமைப்பு ஒரு காலத்தில் அப்படி இருந்தது, ஆனால் நானும் என்னுடைய நிறுவனமும் அப்படி இல்லை என்பதை நிறுவவே முயல்வார்கள். ஏனென்றால் அமைப்புரீதியிலான சலுகைகளை அவர்கள் இழக்கத் தயாராக இல்லை. பாலின, சாதி மற்றும் இன அடிப்படையிலான அமைப்புரீதியான சலுகைகள் பிறப்பிலேயே கிடைத்துவிடுவதால் ஒடுக்கப்பட்டவர்கள் சமமாய் அதை உரிமை கோரும்போது அதை கிடைக்காமல் தட்டிவிடச்செய்வதை லாவகமாய் செய்ய முடிகிறது. அதை நிரூபிக்குமளவு சாட்சியங்கள் இருப்பதும் இல்லை. இஸ்திரிகளாக்கப்பட்டவர்கள் தங்களை தாங்களே ஒடுக்கிக்கொள்வதைச் சுய விருப்பத்துடன் முடிவு செய்ய வைப்பதே இதன் நடைமுறையாய் இருக்கிறது.அங்கே தான் "வளர்ப்பு" வேலை செய்கிறது. இஸ்திரிகள் முதலாளியை முதலாளியாகவும் தொழிலாளியை தொழிலாளியாகவும் வளர்க்கக் கடமைப்பட்டவர்கள்.

கல்வி வாய்ப்பினால் இப்போது இஸ்திரிப்பெட்டிகளுக்கு கிடைக்கும் உள்ளீடு அதிகமாகிவிட்டது. பொருளாதாரச் சார்புநிலை குறைவதால் சொந்த முடிவுகளுக்கும் செல்லவே விரும்புகிறார்கள். அதனால் இஸ்திரிகளின் சூடு தாங்காமல் தான் பெரிய நிறுவனம் தன்னைத் தானே தகவமைத்துக்கொண்டு சிறிய நிறுவனமாக செயல்படுகிறது. ஓவராய் சூட்டை குறைத்தால் இஸ்திரி பேட்டி நிறுவனத்துக்குப் பயன்படாது. தானே முடிவெடுக்கும் இஸ்திரிப்பெட்டி இருந்தென்ன லாபம்? இருக்கும் இஸ்திரிப்பெட்டியும் சூடு கூடிக்கொண்டே செல்வதைத் தான் காண முடிகிறது. தன்னுடைய மரபு தப்பிப்பிழைக்க திரும்பவும் இஸ்திரியை ஈர்த்துதான் ஆகவேண்டும் என்கிற நிலை திரும்பிக்கொண்டிருப்பதைக் காண முடிகிறது. அவர்கள் தருவதாய் நம்பவைத்துக்கொண்டிருந்ததை இருப்பதாய் கருதிக்கொண்டு இஸ்திரிப்பெட்டிகள் செயல்பட தொடங்கிவிட்டன. இஸ்திரிகள் நிறுவனத்தில் நடத்தும் மாற்றங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.






அரும்பின் அழகு மடலை
பூக்கும் விழிகள் வாழ்த்தும்!
தாவி வரும் அலையை
அணைக்கும் கரை வாழ்த்தும்!
வீசி வரும் தென்றலை
நனிபசு மரங்கள் வாழ்த்தும்!
பாடி வரும் குயிலை
இசை கானகம் வாழ்த்தும்!
மலர்ந்து வரும் புன்னகையை
மனமார்ந்த அன்பு வாழ்த்தும்!
பிறந்தநாள் காணும் எதிர்காலமே
எந்தநாளும் எந்தனுளம் வாழ்த்தும்!
எம்மில் இருந்து சுரக்கும் கவிதையே
உம்மை இந்த வரிகளும் வாழ்த்துகின்றன!!
உம்மை இந்த வரிகளும் வாழ்த்துகின்றன!!
பிறந்தாநாள் கொண்டாடும் செவ்வந்திற்கு
இனிய பிறந்த நாள் வாழ்த்து!
வாழிய வாழிய வாழிய வாழியவே!!

என்று வாழ்த்தும்

**சி.திருமலைஞானம் – தி . பிரியாதர்சினி**



## பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் - அமெரிக்கா

### தோழர்

# ஆளூர் ஷா நவாஸ்

**துணைப்பொதுச்செயலாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சி**

## அவர்களுடன் ஒரு கலந்துரையாடல்







கடந்த பிப் 18,2018 , ஸ்பிரிங்ஃபீல்டு நியூ ஜெர்சியில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் தோழர் ஆளூர் ஷா நவாஸ் அவர்களோடு கலந்துரையாடல் நடைபெற்றது . பெரியார் பன்னாட்டு அமைப்பு ஒருங்கிணைப்பாளர் தோழர் சோமா இளங்கோவன் பொன்னாடை அணிவிக்க, தோழர் அவர்களுக்கு சமூகநீதிக்கான "செயல்" விருது தோழர் தாமஸ் அவர்களால் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் சார்பில் வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து தோழர் ஆளூர் ஷா நவாஸ் அவர்கள் "குறி வைக்கப்படும் பெரியார்", என்ற தலைப்பில் உரையாற்றி , தந்தை பெரியார் எனும் தத்துவ பலத்தை வீழ்த்தினால் தான் தமிழ் நாட்டில் வலது சக்திகள் கால் ஊன்ற முடியும் என்ற காரணத்தினால் தான் , பார்ப்பனீயம் தமிழ் தேசியம் மூலமாக , பெரியார் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உழைக்கவில்லை போன்ற கேள்விகளை முன்வைப்பதன் மூலமாக அசைக்க பார்க்கின்றார்கள் , அதற்கு நாம் இடம் கொடுக்காமல் ஒற்றுமையுடன் செயல் பட வேண்டும் , காவிகளை - இந்துத்துவத்தை வீழ்த்த வேண்டும் என்று உரையாற்றினார். மேலும் , திராவிடர் இயக்கங்கள் , பொதுவுடமை , தலித் இயக்கங்கள் இணைந்து இளைஞர்களிடம் பெரியார் -அம்பேத்கர் கருத்துக்களை புத்தாக்கத்துடன் கொண்டு செல்ல வேண்டும் என்றார் .

தோழர்கள் பலர் கலந்து கொண்டு பெரியாரையும் -அம்பேத்கரியம் பற்றி தங்கள் கேள்விகளை கேட்க மிகத் தெளிவாக அவர்கள் கேள்விகளுக்கும் பதில் அளித்தார். நிகழ்ச்சி இனிதே முடிந்தது .

**அட்டைப்பட உதவி**



**டிராட்ஸ்கி மருது**

● டெரன்ஸ் ஹெஸ்டன்



# மீனவர்கள் மீதான இனப் படுகொலை

சென்ற2017 நவம்பர் 29 மற்றும் 30 ஆகிய நாட்களில் வீசிய ஒக்கி புயல் குமரி மாவட்ட மீனவ மக்களையும் அவர்களது வாழ்வாதாரத்தையும் பெரிதும் சீர்குலைய செய்துள்ளது. மீனவ கிராமங்களில் அழுகுரல்கள் இன்றும் கேட்டு கொண்டு தான் கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கான மீனவர்கள் பலியாகியிருக்கிறார்கள்.

வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களிலும், சுனாமி வந்த சமயத்திலும் மீனவர்கள் செய்த மீட்புபணிகளும் செய்த சேவை களும் மிகவும் மகத்தானவை. ஆனால் நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கும் போது எங்களுக்காக ஒருத்தரும் வரலையே என்கிற வேதனையில் இன்று மீனவர்கள் இருக்கிறார்கள்.

**மீனவர்களின்
மரணத்திற்கு பின்னால் இருப்பது நம்
அரசுகளின் பாசிச முகமே.
அரசுகளோடு
சேர்ந்தகொண்டு நம் இந்தியசமூகமும்
தன் கோர முகத்தை காட்டி
மீனவர்களை
படுகொலை செய்தது.**



பல குடும்பங்கள் தங்கள் குடும்பத்தின் முதுகெலும்பாக இருக்கும் நபர்களை இழந்திருக்கிறார்கள். கடலுக்குச் சென்ற நூற்றுக்கணக்கான மீனவர்கள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்றே இன்னும் தெரியவில்லை.பாதிக்கப்பட்ட குடும்பங்களோடு பேசும் போது நம் கண்ணில் இரத்தக் கண்ணீரே வருகிறது.

ஆனால் மீனவர்கள் பலியானதற்கு ஒக்கி புயல் தான் காரணமா என்றால் இல்லை என்பது தான் பதில். மீனவர்களின் மரணத்திற்கு பின்னால் இருப்பது நம் அரசுகளின் பாசிச முகமே. அரசுகளோடு சேர்ந்து கொண்டு நம் இந்தியச் சமூகமும் தன் கோர முகத்தைக் காட்டி மீனவர்களை படுகொலை செய்தது. ஆம்! நடந்திருப்பது ஓர் இனப்படுகொலை. இந்த இனப்படுகொலைக்கு பின்னால் இருக்கும் காரணிகளைப் பற்றி பேச வேண்டியது மிக அவசியமான ஒன்று.

முதலில் ஒக்கி புயலால் பாதிக்கப்பட்ட குமரி மண்டலத்தில் காணப்படும் அரசியல் மற்றும் சமூகநிலையைப் பற்றி பார்ப்போம். பாதிக்கப்பட்ட மீனவ கிராமங்களுக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர் கூறும் போது மீனவ கிராமங்களைத் தவிர இம்மாவட்டத்தின் இதர பகுதிகளில் கடலில் உயிருக்கு போராடும் மீனவர்களைப் பற்றி யாரும் கவலை கொள்வதாகத் தெரியவில்லை என்றார். இது தான் குமரி மாவட்டத்தின் கள யதார்த்தம். தன் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் பாதிக்கப்படும் போது கூட அதனைப் பற்றிய சிறிய கவலை கூட கொள்ளாமல் இருக்கிறார்கள் இப்பகுதி மக்கள். இதற்கு பின்னால் இருப்பது சாதி வெறி மற்றும் மத வெறி.

குமரி மண்டலத்தில் என்று ஆர்.எஸ்.எஸ் சக்திகள் வலுப்பெற ஆரம்பித்ததோ அன்றே அப்பகுதி மக்களிடையே சாதி வெறியும் மத வெறியும் ஆட்டம் போடத் தொடங்கிவிட்டது. வெறுப்பை மூலதனமாக்கி அரசியல் வெற்றிகளைப் பெறுவது ஆர்.எஸ்.எஸின் பாணி. ஆகையால் ஆர்.எஸ்.எஸ் பெற்றெடுத்த குழந்தையான பிஜேபிக்கு கணிசமான ஓட்டு வங்கி இம்மண்டலத்தில் இருப்பதில் ஆச்சரியம் இல்லை.

2014 நாடாளுமன்ற தேர்தலில் பிஜேபிக்கு எம்.பி பதவியைக் கொடுத்து பொன்னாரை பாராளுமன்றம் அனுப்பி வைத்தது கன்னியாகுமரி தொகுதி. 2016 சட்டமன்ற தேர்தலில் பிஜேபியால் குமரி மண்டலத்தில் வெற்றி பெற முடியாவிட்டாலும் கணிசமான வாக்குகளை பெற்றது.பிஜேபியின் மாநில தலைவரான தமிழிசையும் இப்பகுதியைச் சேர்ந்தவரே. குமரி மண்டலத்தில் பெரும்பான்மையாக இருப்பது நாடார்கள். இவர்களின் ஆதரவால் தான் குமரி மண்டலத்தில் பிஜேபியும் அதன் தாயான ஆர்.எஸ்.எஸ்-ம் உயிர்ப்போடு இருக்கிறது.

இதில் ஓர் ஆறாத வடு என்னவென்றால் குமரி உட்பட தென்மாவட்டங்களில் பெரும்பான்மையாக இருக்கும் நாடார்கள் மீனவர்களுக்கு ஆதரவாக போராட்டங்களை மேற்கொண்டிருந்தால் பல மீனவர்கள் உயிரோடு மீட்கப்பட்டிருப்பார்கள் என்பது நிச்சனமான உண்மை. ஆனால் இவர்களை மீனவர்களுக்கு ஆதரவாக செயல்படாமல் தடுத்தது இவர்களின் சாதி வெறி. இந்த சாதி வெறிக்கு உரம் போட்டு வளர்ப்பது அங்கேயிருக்கும் சங்பரிவாரங்களே.

சமீப உதாரணம், திமுகவின் செயல் தலைவரான ஸ்டாலின் நாடார்களின் குலத்தொழிலான பனையேறும் தொழிலைக் கூறி நாடார்களை இழிவு செய்து விட்டதாக சில நாட்களுக்கு முன் ஆர்.எஸ்.எஸ் கிளப்பிய வதந்தியால் நாடார்கள் பலர் உணர்ச்சி பிழம்பாக மாறி ஸ்டாலினுக்கு பல விதங்களில் எதிர்ப்பைக் காட்டினார்கள். ஸ்டாலின் உருவப்பொம்மை எரிக்கப்பட்டது. நாடார் சங்கங்களின் சார்பில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டது.

இது வதந்தி என்று நிருபணம் செய்யப்பட்ட பின்பு தான் அவர்களின் எதிர்ப்பு அடங்கியது. ஓர் வதந்திக்கு பலியாகி எதிர்ப்பை காட்ட தெரிந்த இவர்களுக்கு தங்கள் பகுதியில் இருக்கும் மீனவர்கள் கடலில் உயிருக்கு போராடும் போது அவர்களுக்கு ஆதரவாக ஓர் சிறிய குரலைக் கூட எழுப்ப மனம் வரவில்லை என்பது கசப்பான உண்மை.

சாதி வெறியைப் போலவே மத வெறியும் மக்களின் மனசாட்சியை கொன்று மீனவர்களை பலி கொடுத்தது. சில தினங்களுக்கு முன் பிஜேபியின் மாநிலத்

**ஓர் வதந்திக்கு
பலியாகி
எதிர்ப்பை காட்டதெரிந்த இவர்களுக்கு
தங்கள் பகுதியில் இருக்கும்
மீனவர்கள் கடலில் உயிருக்கு
போராடும் போது
அவர்களுக்கு ஆதரவாக ஓர் சிறிய
குரலை
கூட எழுப்ப மனம்
வரவில்ல.**






தலைவர் தமிழிசை மதுரை மீனாட்சி அம்மன் கோவில் தீவிபத்து குறித்து பேசுகையில் ஓர் கருத்தைக் கூறினார். அதாவது அங்கே மாற்று மதத்தினரும் கடவுள் மறுப்பாளர்களும் கடை வைத்திருப்பதால் இந்த தீவிபத்தை அவர்கள் நடத்தியிருப்பார்கள் என்பது தான் அவர் பேசிய பேச்சின் கருத்து.தமிழகத்தை கலவர பூமியாக மாற்ற வேண்டும் என்கிற வஞ்சக எண்ணம் நிரம்பிய ஒருவரால் மட்டுமே இப்படிப்பட்ட கருத்துக்களை கூற இயலும். தமிழிசையும் பொன்னாரும் வெளிப்படையாகவே தென் மாவட்ட மக்களிடையே மத வெறியைத் தூண்டி வருகிறார்கள்.

இதுவும் மீனவர்களுக்கு நேர்ந்த கொடுமைக்கு பெரிதும் காரணம். தன் பகுதியை சேர்ந்த மீனவர்கள் உயிருக்காக உதவிக்குரல் கேட்கும் போது அவர்களுக்காக போராடாமல் அவர்களை மத அடிப்படையில் வேறுபடுத்தி ஒடுக்கினார்கள் இப்பகுதி மக்கள்.

மக்கள் சாதி,மதம் இவற்றை கடந்து போராடியிருந்தால் இன்று பல மீனவர்கள் நம்மிடையே உயிரோடு மீட்கப்பட்டிருப்பார்கள், பல குடும்பங்கள் இப்படி நிலைகுலைந்து போயிருக்காது. உடன் இருக்கும் இருக்கும் மனிதர்களே சாதி,மதம் கொண்டு சக மனிதர்களை ஒடுக்குவது இந்திய சமூகத்தில் காணப்படும் மிகப் பெரிய தீமை.

ஊடகங்களுக்கும் மீனவர்களின் இனப்படுகொலையில் பங்கு உண்டு. ரஜினியும் கமலும் தும்மினால் கூட அதை வைத்து பல வாரங்கள் விவாதங்கள் வைக்கிறது இந்த ஊடகங்கள். ஜீயர் உண்ணாவிரதம் இருந்தால் அதை தேசிய பிரச்சனையாக மாற்றுகிறது ஊடகங்கள். ஆண்டாள் பிரச்சனையை வைத்து பல நாட்கள் விவாதிக்கிறது ஊடகங்கள். ஆனால் மீனவர்கள் கொத்துக் கொத்தாக மடியும் போது அதை கண்டும் காணாமலும் இருந்து கள்ள மவுனம் காத்தது ஊடகங்கள்.

சமூக வலைத்தளங்களில் கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக தமிழக ஊடகங்களில் சில இப்பிரச்சனையில் காலம் கடந்தாவது கவனத்தை காட்டினாலும் ஆங்கில ஊடகங்கள் இந்த பிரச்சனையை கண்டு கொள்ளவே யில்லை. சர்வதேச பிரச்சனையாக மாற்றியிருக்க வேண்டிய மீனவர்களின் பிரச்சனையை வெறும் உள்ளூர் பிரச்சனையாக மாற்றி அதை நீர்த்து போகச் செய்ததலில் ஊடகங்களுக்கு பெரும் பங்கு இருக்கிறது.

சில நூறு பேர்களுடன் காணாமல் போன மலேசிய விமானம் பற்றிய செய்தி இந்திய ஊடகங்களில் முதல் இடத்தை பிடிக்கிறது. ஆனால் பல ஆயிரக்கணக்கான சொந்த நாட்டு மீனவர்கள் காணாமல் போன செய்தி இந்திய ஊடகங்களில் கடைசி இடத்தில் கூட வரவில்லை.

இந்திய அரசு மீனவர்கள் மீது நடத்திய இனப்படுகொலையை ஊடகங்களும் பொது சமூகமும் வேடிக்கை பார்த்தது.









நூற்றுக்கணக்கான மீனவர்கள் மடிந்ததற்கும் காணாமல் போனதற்கும் மத்திய பிஜேபி அரசு, மாநில அதிமுக அரசு இவை இரண்டுமே இவ்விகாரத்தில் மிக அலட்சியமாக நடந்து கொண்டது தான் காரணம். இவைகள் நினைத்திருந்தால் அனைத்து மீனவர்களையும் மீட்டிருக்க முடியும், ஆனால் மீனவர்கள் மடியட்டும் என்று இவர்கள் செயல்பட்ட விதமும் காட்டிய அலட்சியமும் மீனவர்கள் மீது நடத்தப்பட்டது ஓர் இனப்படுகொலையே என்று உறுதியாக கூறுகிறது.

புயல் வருவதை பற்றி அரசு முன்கூட்டியே மீனவர்களுக்கு தெரிவிக்கவில்லை . மீனவர்களின் உயிர்களைச் சிறிதும் மதியாமல் மீட்பு பணிகளை செய்வதில் அரசுகள் அலட்சியம் காட்டியது .நூறு நாட்டிகல் மைல்களையும் தாண்டி மீன்பிடிக்கச் செல்வது தான் குமரி மாவட்ட மீனவர்களின் வழக்கம். ஆனால் நம் அரசுகள் அனுப்பிய மீட்புபடைகள் வெறும் 50 நாட்டிகல் மைல் வரைதான் பெயரளவில் தேடுதல் நடத்தின. பல நாட்களாக உயிருக்கு போராடிய மீனவர்களைத் தேடி வந்து காப்பாற்றியது சக மீனவர்கள் தான் .அரசு அனுப்பிய மீட்பு படைகள் ஏதுவும் மீனவர்களை மீட்கவில்லை. மத்திய மாநில அமைச்சர்கள் காட்டிய திமிர் அவர்கள் மீனவர்களை எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதை காட்டியது. பிரதமர் மோடி புகைப்படத்திலேயே பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டது அராஜகத்தின் உச்சம். மீனவர்கள் மீதான அலட்சியத்தின் மூலம் இந்திய அரசு மீனவர்கள் மீது ஓர் இனப்படுகொலையை நடத்தியிருக்கிறது.

மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் தங்கள் அபயக்குரல் கேட்க வேண்டும் என்பதற்காக பல அறவழிப் போராட்டங்களையும் செய்தார்கள் மீனவர்கள். மீனவர்களின் அபயக்குரல்கள் தங்கள் செவிகளில் விழுந்தாலும் செவிடர்களைப் போல் இருந்தார்கள் மத்திய அரசும் மாநில அரசும்.

சங்கராச்சாரியார் முன்னால் ஒட்டுமொத்த அரசு நிர்வாகமும் மண்டியிட்டு விழுந்து கிடக்கிறது .ஆனால் மீனவர்கள் மரணத்தின் விளிம்பில் நின்றால் கூட அவர்களுக்கு உதவாமல் அலட்சியம் காட்டுகிறது அரசு நிர்வாகம். நம் நாட்டு அரசு நிர்வாகத்தை கையில் வைத்திருக்கும் இந்துத்துவவாதிகளின் பார்வையில் மீனவர்கள் என்பவர்கள் சூத்திரர்கள். மீனவர்கள் மீது காட்டப்பட்ட அலட்சியத்திற்கு இதுவே காரணம்.

மேலும் சாகர் மாலா திட்டத்தின் படி மீனவர்களை கடற்கரையை விட்டே விரட்ட வேண்டும் என்பதால் இந்திய ஏகாதிபத்தியம் ஒக்கி புயலை பயன்படுத்தி மீனவர்கள் மீது இனப்படுகொலையை நடத்தியிருப்பதாக சமூக போராளிகள் பலர் கருதுகிறார்கள்.

இந்துத்துவவாதிகளின் கையில் இருந்து என்று நம் நாட்டு அனைத்து நிலைகளிலும் விடுதலை பெறுகிறதோ அன்று தான் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான விடுதலையும் உரிமையும் சாத்தியமாகும்.





> “சங்கரமட
> சர்ச்சைகள்:
>
> வேலைக்கு செல்கிற
> பெண்கள் எல்லாம்
> விபச்சாரிகள் என்றது,
> விதவைப்பெண்கள் தரிசு
> நிலங்கள் என்றது !!”

# காஞ்சி சங்கரமடமெனும் பார்ப்பனப் பாசிசக் கூடாரம்

கார்த்திகேயன் தெய்வீகராஜன்

காஞ்சி சங்கரமடம் சர்ச்சைகளில் சிக்குவது இது முதல்முறை அல்ல. 1986 இல் காஞ்சி சங்கராச்சாரிகளில் ஒருவரான சுப்பிரமணியன் (எ) ஜெயேந்திரன் தண்டத்தையும் , மடத்தையும் விட்டுவிட்டுத் தலைக்காவிரிக்கு ஒருவருடன் ஓடியது, வேலைக்குச் செல்கிற பெண்கள் எல்லாம் விபச்சாரிகள் என்றது, விதவைப் பெண்கள் தரிசு நிலங்கள் என்றது, எழுத்தாளர் அனுராதா இரமணன் அவர்களிடம் 1992 இல்

**தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்ட போது , ஆணவத்துடன் அமர்ந்திருந்து மீண்டும் சர்ச்சையைக் ளெப்பியிருக்கிறார் காஞ்சி டத்தின் இளைய மடாதிபதி சங்கரநாராயணன் (எ) விஜயேந்திரன்.**



கைது செய்யப்பட்டது, தற்போது தமிழ்த்தாய் வாழ்த்திற்கு எழுந்து நில்லாதது உட்பட பல கூத்துகள் நம் கண்முன்னே நடைபெற்றவை தாம். இத்துணை கூத்துகளுக்குப் பிறகும், பார்ப்பனர்கள் காஞ்சி சங்கராச்சாரிகளை உயர்த்திப் பிடிப்பதும், அதனுள் இருக்கும் அரசியலும் உற்று நோக்கப்படவேண்டியவை. இவ்வரசியலை அறியாமல், பார்ப்பனர் அல்லாதோரும் கூட காஞ்சி சங்கரமடத்தின் பக்தர்களாக, அதன் புகழ் பரப்புபவர்களாக இருப்பது வேதனைப்படவேண்டிய நிகழ்வாகும்.

அண்மையில் நடந்த வடமொழி - தமிழ் அகராதி வெளியீட்டு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்ட போது , ஆணவத்துடன் அமர்ந்திருந்து மீண்டும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார் காஞ்சி மடத்தின் இளைய மடாதிபதி சங்கரநாராயணன் (எ) விஜயேந்திரன். உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் இச்செய்கையைக் கண்டித்துத் தங்களது வன்மையான எதிர்ப்பினைத் தெரிவிப்பார்கள் என்று எண்ணிய என்னைப் போன்ற சிலருக்கு ஏமாற்றம் தான் ஏற்பட்டது. பெரியாரியத் தோழர்களும், அம்பேத்கரிய தோழர்களும்தான் விஜயேந்திரனுக்கு எதிராக கண்டனங்களைத் தெரிவித்தார்கள். எது ஒன்றையும் புனிதப்படுத்துவதை ஏற்றுக்கொள்ளாத பெரியாரியத் தோழர்கள் தமிழ்த் தாய்வாழ்த்தினை மட்டும் புனிதப்படுத்துவதாக எண்ணக்கூடாது. தேசியப் பண்ணிற்கு எழுந்து நிற்கும் விஜயேந்திரன் தமிழ்த் தாய்வாழ்த்திற்கு எழுந்து நில்லாததன் பின்னணியிலிருக்கும் வர்ணபேதத்தை வெளிக்கொணரவே பெரியாரியத் தோழர்கள் எதிர்வினை ஆற்றினார்கள். அமெரிக்காவிலிருக்கும் ஒன்றிரண்டுத் தமிழ்ச் சங்கங்கள், அமைப்புகள் தவிர மற்ற அனைத்துத் தமிழமைப்புகளும் வாய்மூடி இச்சம்பவத்தை எளிமையாகக் கடந்து சென்றனர். அவ்வமைப்புகளில் பொறுப்புகளிலிருக்கும் சிலரிடம் அவர்களின் செய்கை தவறு என்று சொன்ன போது, இந்துக்களின் தலைவரைப் பற்றி தமிழ்ச் சங்கங்கள் கருத்து சொல்வது சரியாக இருக்காது என்றும், தமிழ்ச் சங்கத்திற்குள் இந்துக்கள் - பிறர் என்ற பிளவுகளை ஏற்படுத்தும் என்றும், 2500 ஆண்டுகளுக்கு மேலான மடத்தினை கண்டிப்பது ஏற்புடையதல்ல என்றும் தங்கள் தவறானப் புரிதலுக்கு ஏற்றாற்போல் கருத்துகளைத் தெரிவித்தனர். காஞ்சி சங்கரமடத்தினைப் பற்றி பார்ப்பனர் அல்லாதோருக்கு இருக்கும் தவறான புரிதல்களையும், காஞ்சி சங்கரமடத்தின் வரலாற்றுப் புரட்டுகளையும் வெளிச்சமிட்டு காட்டுவதே இக்கட்டுரையின் முதன்மையான நோக்கம்.

இன்றைக்குக் காஞ்சி சங்கரமடத்திற்கு இரண்டு மடாதிபதிகள் - பெரிய சங்கராச்சாரி மற்றும் சின்ன சங்கராச்சாரி இருக்கிறார்கள். ஆனால், 1994 இல் சுவாமிநாதன் (எ) சந்திரசேகரேந்திரன் மறையும் வரை மூன்று சங்கராச்சாரிகள் இருந்தனர். 1986 இல் இன்றைய பெரிய சங்கராச்சாரி




ஜெயேந்திரன் தனது தண்டத்தை விட்டுவிட்டு தலைக்காவிரிக்கு ஒருவருடன் ஓடினார் என்று இக்கட்டுரையின் முன்னுரையில் தெரிவித்திருந்தேன்; அன்றைய இளைய சங்கராச்சாரியான ஜெயேந்திரன் மடத்தினை விட்டு ஓடியதால் அன்று சிறுவனாக இருந்த விஜயேந்திரன் இளைய சங்கராச்சாரி ஆக்கப்பட்டார். ஒடிப்போன ஜெயேந்திரன் மீண்டும் அழைத்து வரப்பட்டதால் இரண்டுக்குப் பதில் மூன்று சங்கராச்சாரிகள் 1994 வரை மடத்தில் இருந்தனர். இதுதான் தமிழ்த்தாய் வாழ்த்தினை அவமதித்த இன்றைய இளைய சங்கராச்சாரி, சங்கராச்சாரியான வரலாறு.

காஞ்சி சங்கரமடத்தினைப் பற்றி பரப்பப்படும் ஒரு வரலாற்றுப் புரட்டு, இம்மடம் ஆதிசங்கரரால் துவங்கப்பட்டது என்றும், இம்மடம் 2500 ஆண்டுகளுக்கு மேலாக பழமைவாய்ந்ததென்றும் சொல்வதாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பிறந்த திருஞானசம்பந்தரை “திராவிட சிசு” என்று குறிப்பிடும் ஆதிசங்கரரின் காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டே என்று டி.டி.கோசாம்பி, அம்பேத்கர் போன்றோர் திட்டவட்டமாகச் சொல்கிறார்கள் ; கி.பி.எட்டாம் நூற்றாண்டில் பிறந்த ஒருவர் தோற்றுவித்த மடமாகவே இருந்தாலும் அது 2500 ஆண்டுகள் பழமையானதாக இருக்க முடியாது. அப்படியிருக்க, இன்றைய காஞ்சி சங்கரமடமோ, ஆதிசங்கரரால் தோற்றுவிக்கப்பட்ட மடமும் கிடையாது. பத்திரிநாத், துவாரகை, பூரி, சிருங்கேரி ஆகிய நான்கு மடங்கள் மட்டுமே ஆதிசங்கரரால் தோற்றுவிக்கப்பட்டவை என்று குறிப்புகள் உள்ளன. இன்றைய கர்நாடக மாநிலத்திருக்கும் சிருங்கேரி நகரிலிருக்கும் சங்கர மடத்தின் கிளை மடமாக 1821 இல் கும்பகோணம் மடம்



தொடங்கப்பட்டது. 1842 இல் காஞ்சி காமாட்சி கோயில் குடமுழுக்கு நடத்த ஆங்கிலேயர்களிடம் அனுமதி பெற்று காஞ்சிக்கு இடம் பெயர்ந்து கும்பகோணத்திலிருந்த கிளை மடம். அதுவே பின்னர் காஞ்சி சங்கரமடம் என்று பெயர் மாற்றம் பெறுகிறது.

இன்றைய காஞ்சி சங்கரமடத்தினை, ஆதிசங்கரர் நிறுவிய ஒரு மடமாக மற்ற நான்கு சங்கரமடத்தினரும் ஒத்துக்கொள்ளாமல் பிரச்சனை வந்த போது, காஞ்சி சங்கரமடம், தங்கள் மடத்துக்கென ஒரு வரலாற்றினை உருவாக்கி அதனை மீண்டும் மீண்டும் சொல்லி உண்மையென நம்ப வைத்தது. காஞ்சி சங்கரமடம் 2500 ஆண்டுகள் என்று நிறுவவேண்டுமென்றால், ஆதிசங்கரரின் காலத்தினையும் முன்னகர்த்தி செல்லவேண்டுமல்லவா, அதனையும் செய்தார்கள் இந்த காஞ்சி சங்காராச்சாரிகள். கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பிறந்த ஆதிசங்கரர், புத்தரின் காலத்துக்கு முன் தோன்றினார் என்று வராற்றுத்திரிபு செய்தனர். மற்ற நான்கு மடங்களுக்கும் மடாம்நாய ஸேது என்று பொதுவாக ஒரு வரலாற்று நூல் மட்டுமே இருக்கிறது. அவ்வரலாற்றில், ஆதிசங்கரர் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இன்றைய கேரளாவின் காலடியில் பிறந்து, வடக்கே கேதார்நாத்தில் மறைந்தார் என்றிருக்கிறது. ஆனால், தங்களை முன்னிலைப் படுத்த, காஞ்சி சங்கராச்சாரிகள் தங்களுக்கென்று எழுதிக்கொண்ட மடத்தின் வரலாற்றில், ஆதிசங்கரர் காலத்தை கி.மு. 508 கி.மு. 476 என்று முன் தள்ளி வைத்தனர். தொடக்கத்தில் ஆதிசங்கரர் சிதம்பரத்தில் பிறந்தார் என்று சொல்லி வந்த காஞ்சி சங்கரமடம், பிறகு காலடி என்று மாற்றிக் கொண்டது. ஆனால் அவர் முக்திநிலை அடைந்து இறந்தது காஞ்சி காமாட்சி கோயிலில் என்று இன்றும் பொய் சொல்லி வருகிறது. கிருஷ்ணசாமி ஐயர் என்ற பார்ப்பனர் இந்தக் காஞ்சி மடத்தின் புரட்டுகள் அனைத்தையும் ஆராய்ச்சி நூலாகவே வெளியிட்டிருக்கிறார்.



பறை இசைக் கலைஞர் வேலு ஆசான்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் பௌத்த மற்றும் சமண சமயங்களையே பின்பற்றி வந்தனர். அந்த நிலையை மாற்ற, சமண, பௌத்த மதங்களை அழிப்பதற்காக முயற்சித்தவர் தான் இந்த ஆதிசங்கரர். உபநிடதங்களில் உள்ளவற்றை சுருக்கமாக்கி, அவற்றினை ஒழுங்குபடுத்தி விளங்கவைக்கும் நூல் தான் பிரம்ம சூத்திரம். இந்த பிரம்ம சூத்திரத்திற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அந்த உரையாசிரியர்களின் ஒருவர் தான் இந்த ஆதிசங்கரர். ஒரே நூலுக்கு ஆதிசங்கரர் எழுதிய உரை அத்வைதம் என்ற மதப் பிரிவானது , மத்துவர் எழுதிய உரை த்வைதம் என்றும், இராமானுஜர் எழுதிய உரை வசிஷ்டாத்வைதம் என்றும் ஆனது. ஒரு குழப்பத்தை நீக்க வந்த மூன்று உரைகள் மூன்று தனிக் குழப்பங்களானது என்று கொள்ளலாம். இந்த ஆதிசங்கரர் தான் சைவம் (சிவ வழிபாடு) , வைணவம் (விஷ்ணு வழிபாடு), கௌமாரம் (முருக வழிபாடு), சாக்தம் (சக்தி வழிபாடு), காணபத்யம் (கணபதி வழிபாடு) , சௌரம் (சூரிய வழிபாடு) என்ற ஆறு பிரிவுகளை ஒன்றிணைத்து ஏறக்குறைய இன்றிருக்கக் கூடிய இந்து மதமாக மாற்றினார். ஆதிசங்கரரின் வாதங்கள் பௌத்த தத்துவத்திலிருந்து திருடப்பட்டவை எனினும் வர்ணாசிரமத் தர்மத்தைக் காப்பதே அவரின் தலையாய நோக்கமாகும். பிரம்ம சூத்திரத்தின் உரை ஆசிரியான ஆதிசங்கரரை அவதாரமாக்கி அரசியல் ஆதாயம் தேடியது காஞ்சி சங்கர மடம் தான்.

சரி, எந்தக் காஞ்சி காமாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு நடத்த இடம் பெயர்ந்தார்களோ, அந்தக் காஞ்சி காமாட்சியம்மன் கோவிலின் வரலாற்றினைப் பாராத்தால், அதுவும் புரட்டாகவே இருக்கிறது. இன்றைய காமாட்சியம்மன் சன்னிதிக்குப் பின் ஐயனார் சன்னதி உள்ளது, காஞ்சி காமாட்சி கோயில் தாய்த்தெய்வ வழிபாடு நடந்த இடம், அதன் பெயர் காமக் கோட்டம் என்கிறார் பேராசிரியர் தொ.ப. ஐயனார் வழிபாடு பார்ப்பனர் அல்லாதார் வழிபாடு. காமக்கோட்டம் என்ற தாய்த்தெய்வக் கோயில்களுக்குரிய பெயரினை தங்களுடையதாக்கிக் கொண்டு காமகோடி என்று தங்களை அழைத்துக்கொள்ளத் தொடங்கினர் காஞ்சி சங்கராசாரிகள். அந்தக் கோவிலைச் சுற்றியிருந்த சமணப் பள்ளிகள், புத்த விகாரைகள் அனைத்தையும் அப்புறப்படுத்தி காஞ்சி சங்கர மடத்தையம் உருவாக்கிக்கொண்டார்கள் .



மாரத்தான் வீரர், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் சைதை மா.சுப்பிரமணியன்

உள்ளபடியே சொல்லப்போனால் காஞ்சி சங்கராச்சாரிகள் ஸ்மார்த்த பார்ப்பனர்கள். ஸ்மார்த்த பார்ப்பனர்கள் தத்துவப்படி அத்வைதத்தை ஏற்றுக்கொண்டவர்கள். அத்வைதம் என்றால் கடவுள் வேறு நாம் வேறு கிடையாது இரண்டும் ஒன்றே,நானே கடவுள் (அஹம் பிரம்மாஸ்மி) என்ற கோட்பாடுடயவர்கள்.இவர்களுக்கும் கோயில்களுக்கும் உறவே கிடையாது. காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலில் கூட சாதாரண மனிதர்களைப் போல இருகைகளைக் கூப்பி வணங்கும் வழக்கம் காஞ்சி சங்காராச்சாரிகளுக்குக் கிடையாது. நெஞ்சின் மேல் கைவைத்து , நீ, நான், நான், நீ, நீயும் நானும் ஒன்று என்று மட்டுமே கூறுவார்கள். ஆனால் , கோயில்களைத் தங்கள் கட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம், இந்துத்வ அரசியலைத் தங்கள் கட்டுக்குள் வைத்திருக்கலாம் என்ற அரசியல் கணக்கில் காஞ்சி சங்கராச்சாரிகள் கோயில்களுடன் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.

**“ ஸ்மார்த்த பார்ப்பனர்கள் தத்துவப்படி அத்வைதத்தை ஏற்றுக்கொண்டவர்கள். அத்வைதம் என்றால் கடவுள் வேறு நாம் வேறு கிடையாது இரண்டும் ஒன்றே,நானே கடவுள் (அஹம் பிரம்மாஸ்மி) என்ற கோட்பாடுடயவர்கள். இவர்களுக்கும் கோயில்களுக்கும் உறவே கிடையாது. ”**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வெகுமக்கள் எழுத்து ஊடகங்கள் பார்ப்பனர் கைகளில் இருந்து வந்ததால், இந்தப் புரட்டினை அவர்களும் பரப்பி மக்களை நம்ப வைத்தனர். அன்றைய பார்ப்பன ஊடகங்களான ஆனந்த விகடன், கலைமகள், தினமணி, இந்து, கல்கி போன்றவை காஞ்சி சங்கராச்சாரியார் “மகா பெரியவர்” , “நடமாடும் தெய்வம்”, “எளிமையே உருவானவர்” என்ற கருத்தியலை மக்கள் மனதில் பதிய வைத்தனர். பார்ப்பனர் அல்லாதார் பார்ப்பன பயங்கரவாத கூடாரமான சங்கரமடத்தின் சூழ்ச்சிக்குப் பலியாக்கியத்தில் முக்கியப்



இயக்குநர் ஒளிப்பதிவாளர் செழியன்

பங்கு தமிழில் முதலில் தோன்றிய தனியார் தொலைக்காட்சிக்கும் உண்டு. இக்கட்டுரையின் முதல் பத்தியில் கூறிய பெரும்பாலான கூத்துகள் எல்லாம் நடந்த பிறகும் கூட, சற்றும் வெட்கமில்லாமல் தீபாவளி, பொங்கல், புத்தாண்டு என எல்லாப் பண்டிகை நாட்களிலும் அதிகாலையிலேயே தனது தொலைக்காட்சியில் ஜெயேந்திரனைத் தோன்ற வைத்து, ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் பார்ப்பனக் கருத்துகளை எடுத்துச் சென்றது அந்தத் தொலைக்காட்சி.

இந்திய விடுதலைக்கு முன்னரே தன்னுடைய அரசியலை பலப்படுத்திக் கொள்ளத் தொடங்கியது காஞ்சி சங்கரமடம். காங்கிரஸ் எனும் தேசிய இயக்கம் வளர்கிற போதே, அவ்வியக்கத்தில் வர்ணாசிரமத் தருமத்தை உயர்த்திப் பிடிக்கும் போக்கும் வளர்ந்து வந்தது. தந்தை பெரியார் காங்கிரஸ் இயக்கத்திலிருந்து வெளியேறியதற்கும் அதுவே காரணமாக அமைந்தது. காங்கிரஸ் தலைவர்கள் பலரும் உயர்சாதி மனப்பான்மையுடன் இருந்ததால், காஞ்சி சங்கரமடத்துடன் இணக்கமாகவே செயல்பட்டார்கள். 1928 – இல் காந்தியார் இந்த மடத்திற்கு வந்து போன பிறகே தன்னுடைய வருணாசிரம தர்மத்தின் மீதான நம்பிக்கையை அரசியலாக வெளியிடுகிறார். இவ்வாறு வளர்ந்த காஞ்சி சங்கர மடத்தின் அரசியல் செல்வாக்கு, வலிமை, இந்திய அரசியல் சட்டம் வரை நீண்டது. இந்திய அரசியல் சட்டம் எழுதப்படும் போதே, 26-வது விதியில் மதச்சுதந்திரம் என்று மட்டும் இருந்ததை ஒவ்வொரு மதப்பிரிவு அல்லது எந்த ஒரு வகைப்பிரிவைச் சேர்ந்ததாயினும் அவற்றுக்கு உரிமை - சுதந்திரம் உண்டு என்று மாற்றியவர்கள் காஞ்சி சங்கராச்சாரிகள். அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று தமிழக அரசு சட்டம் கொண்டு வர மத்திய அரசிடம் அங்கீகாரம் கோரிய போது, மத்திய அரசு இந்த 26வது விதியைச் சுட்டிக்காட்டியே அங்கீகாரம் தர மறுத்தது. இப்படி அரசியல் ரீதியாக தங்களை இந்து மக்களின் தலைவராக காஞ்சி சங்கராச்சாரிகள் பிரகடனப் படுத்திக் கொண்ட பிறகு, பார்ப்பனர்கள் அவர்களுக் குள்ளிருந்த கருத்து மாறுபாடுகளை மறந்து ஒரு அரசியல் ஆதாயத்திற்காகச் சங்கர மடத்தின் பின்னர் திரண்டனர். இன்றும் திரண்டு நிற்கிறார்கள்.

இந்திய அரசில் உச்சக்கட்ட அதிகாரம் செலுத்தி, இந்தியாவின் இரும்புப் பெண்மணி என்று போற்றப்பட்ட அன்றைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி காஞ்சி சங்கரமடத்திற்கு வந்த போது , ஒரு விதவையின் முகத்தில் விழித்தால் தீட்டு என்று கருதிய காஞ்சி சங்கரமடத்தினர், இருவருக்கும் நடுவிலே நீர் இருந்தால் தீட்டு போய்விடும் என்ற தங்களது நம்பிக்கையின் படி, ஒரு புறமாக சங்கராச்சாரியை யும் மறுபுறமாக இந்திரா காந்தியையும் உட்கார வைத்தார்கள். அதே போல் இவர்கள் அமரும் இடங்களில், இவர்களை விட உயரமான இடங்களில் யாரும் அமரக்கூடாது என்றும் கட்டாயமாகச் சொல்வார்கள். கைது செய்து சிறைக்கு அழைத்துச் செல்லும் போது கூட, தன்னுடன் வாகனத்தில் பார்ப்பனர்கள் மட்டுமே வரவேண்டும் என்று கூறியதாகச் செய்திகள் வெளியாகின. நீதிமன்றத்தில் தன்னுடைய இயற்பெயரான சுப்பிரமணி என்று அழைத்தபோது அதனை எதிர்த்ததுடன், இயற்பெயரில் கையொப்பமிட மாட்டேன் , கைரேகை மட்டுமே இடுவேன் என்று பிறப்புவழிப்பட்ட மேலாண்மை அதிகாரத்தைச் செலுத்தினார் ஜெயேந்திரர். ஜெயேந்திரன் கைதான போது, சகல மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும் என்பதில் அன்றைய பிரதமர் அலுவலகம் தனிக்கவனம் செலுத்தியது. வாழை இலையில் காலைக்கடன் கழிக்கும் வழக்கத்தையு டைய சங்கராச்சாரிக்கு சிறைச்சாலைக்கே வாழையிலை அனுப்பிய வெட்கக்கேடுகளும் கூட நடந்தேறின. ஆகவே, தமிழ் மொழியினை நீச மொழி என்று கருதும் காஞ்சி சங்கரமடமும் சங்கராச்சாரிகளும் தமிழ்த் தாய்வாழ்த்திற்கு எழுந்து நில்லாதது வியப்பில்லை.

உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதிபதிகளை எல்லாம் கைது செய்து சிறையில் அடைத்து விடவேண்டும், பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்து மடாதிபதிகளை தீவாந்திரத்திற்கு அனுப்பிவிட வேண்டும் என்று 1928 இல் தந்தை பெரியார் பேசியிருக்கிறார். குறிப்பாக சங்கராச்சாரியினை எதிர்த்து 1932 இல் குடியரசில் எழுதியுமிருக்கிறார். பூணூல், குடுமி, பஞ்சகச்சம், மடிசார், புலால் உண்ணாமை போன்ற பழக்கங்கள் பார்ப்பன முகம் மட்டுமே. பார்ப்பனியத்தின் உயிர் என்பது வெகுமக்களை “ஏற்றத்தாழ்வுகள்” நியமானது என்ற எண்ணத்தினை ஏற்றுக்கொள்ள வைத்தல் தான். அதனால் தான் இந்து மதம் எத்துணைத் தீண்டாமையைக் கடைபிடித்தாலும் அதனைப் பலர் இறுகப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள் . “மகா பெரியவா” என்று அறியாமல் சிலர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். பெரியார் பெயரால் நடக்கும் பல்கலைக்கழகங்களில் கூட ரதயாத்திரை நடக்கின்றன.


இந்து மதம் என்பதே பார்ப்பன மதம். பல தமிழர்கள் நம்பிக்கொண்டிருப்பது போல், தன்னை “ஜகத்குரு” என்று அழைத்துக்கொள்ளும் சங்கராச்சாரிகள் அனைத்து இந்துக்களுக்குமான தலைவர்கள் கிடையாது. அவர்கள் வர்ணாசிரமத் தர்மத்தை நிலைநிறுத்தி, பார்ப்பன அரசியல் செல்வாக்கை அதிகரித்து, இந்துத்துவ அரசியலை வெளிப்படுத்தும் ஒரு பாசிசக் கும்பல். அதனால் தான் தந்தை பெரியார் “ இந்து மதம் என்பது பார்ப்பனச் சக்திக்கேற்ப, பார்ப்பனரல்லாதாரின் முட்டாள்தனத்திற்கும், மானமற்றத் தன்மைக்கும் ஏற்ப அவ்வப்போது உண்டாகும் - உண்டாக்கிக்கொள்ளும் திட்டங்களும் கருத்துகளும் ஆகும்” என்று தெரிவித்தார்.


கோவில்களில் நமக்கு நம்பிக்கை இல்லாவிடிலும் இந்துக்களின் கோவில்களில் மதச்சார்பற்ற அரசுக்கு என்ன வேலை என்று தற்போது தமிழகக் கோவில்களைத் தங்கள் கைக்குள் கொண்டுவர நடக்கும் முயற்சிகளைக் கடுமையாக எதிர்க்க வேண்டும். கோவில்களுக்குத் தொடர்பே இல்லாத காஞ்சி சங்கரமடத்தினர் கோவில்களைக் கொண்டு எவ்வாறு அரசியல் அதிகாரம் பெற்றனர் என்பதை நாமறிவோம். இந்து மதத்தின் முகமாக இருக்கிற காஞ்சி சங்கராச்சாரியின் முகத்திரை கிழித்து அவர்களின் பாசிசத்தை அடக்க வேண்டும். பார்ப்பனர் இல்லாத அமைச்சரவையை 50 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் நிறுவிய தமிழர்களால் மட்டுமே அது முடியும்.





ஓவியர் ஹாசிப்கான்

# விடுபட்ட வரலாறுகள்....


















● பிரேமதாஸ் மோகன்ராஜ்



பள்ளிக் காலங்களில் வரலாற்றுப் பாடத்தில் எப்போதும் நாற்பது மதிப்பெண்களைத் தாண்டியதில்லை என்ற முன்குறிப்போடே தொடங்குகிறேன்...

வரலாற்றுப் பாடம் என்றாலே ஒருவித ஒவ்வாமை இருந்தது என்பது உண்மைதான். ஆர்வமின்மையா, அதிக நினைவாற்றல் தேவை என்பதாலா, குமுதினி பெரியசாமி என்ற ஆசிரியரின் கண்டிப்பான வகுப்புகளா எதுவென்று சரியாக நினைவில்லை. தேர்வுக்கு முன்னிரவு அப்பா எப்போதும் கதை போல ஏதோ சொல்லிக் கொடுப்பார், எழுதி தேர்ச்சி மட்டும் அடைந்துவிடுவேன், அவ்வளவுதான். பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வு மட்டும் விதிவிலக்கு. கேள்வித்தாள் முறை மாறியதாலும், அதற்கேற்ப அப்போது வெளிவந்த காந்தி கைடாலும், சராசரிக்கும் அதிகமாகவே தேறிவிட்டேன். பதினோறாம் வகுப்பிலிருந்து வரலாறு இல்லை என்பதே எனக்கு பெரிதும் ஊக்கமாயிருந்தது.

கால் நூற்றாண்டு காலச் சுழற்சியில், தோழர்களின் அறிமுகத்தால் படிக்க நேரிட்ட சொற்ப புத்தங்ககளை நினைத்தால் வியப்பாகவே இருக்கிறது. அதுவும் இரண்டு அகராதிகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இரண்டு மாதங்களாக வெறும் இருநூறு பக்கங்கள் கொண்ட MSS பாண்டியனின் (JNU பேராசிரியர்) நூல்களெல்லாம் என் வரலாற்று "ஆர்வத்திற்கு" கொஞ்சம் அதிகம்தான்.

நினைவுபடுத்தி ஒப்பிட்டுப் பார்த்தால் பள்ளியில் படித்ததற்கும் வெளியில் கற்றதற்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்குமானது. இதுவெல்லாம் மத்திய அரசு தேர்வாணையத்தின் பாடத் திட்டத்திலேயே கிடையாது என்று சில மாதங்ளுக்கு முன் இந்திய ஆட்சிப் பணிக்குத் பதிவியுயர்வு பெற்ற தோழர் வேதனையுடன் ஒருமுறை பகிர்ந்து கொண்டார். அதனால் இது பள்ளிகளின் தவறோ, ஆசிரியர்களின் குறைபாடோ அல்ல, நமது பாடத்திட்டத்தின் திட்டமிட்ட பிழை என்பதே உண்மை.

சரி பள்ளியில் படித்தது எது? படிக்காதது எது? என்று முதல் பக்கத்திலிருந்தே தொடங்கி ஒரு பருந்துப் பார்வையிடுவோம்....



கவிஞர் சல்மா

தீண்டாமை ஒரு குற்றம், ஒரு பாவச் செயல், ஒரு மனிதத்தன்மையற்ற செயல் என்றிருக்கும் ஆனால் அதன் தோற்றுவாய் குறித்தோ, நடைமுறையில் இன்றளவும் எப்படி இருக்கிறது என்றோ, யார் எவர் மீது நிகழ்த்துகிறார்கள் என்றோ அல்லது அதை ஒழிக்க ஆக்கப்பூர்வமான செயல்திட்டம் குறித்தோ ஒன்றும் இருக்காது.

பெரும்பாலும் பாட நூல்களில் இந்திய சுதந்திர போராட்டமும், முகலாய மன்னர்களின் ஆட்சியைப் பற்றியதாக இருக்கும். ஆனால் ஏறத்தாழ 700 ஆண்டுகள் இருந்த முகலாய ஆட்சிக் காலத்தில் தோன்றிராத போராட்டம் இருநூறு ஆண்டுகள் மட்டும் இருந்த ஆங்கிலேயர் காலத்தில் தோன்றிய காரணம் எழாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

கிழக்கிந்திய கம்பெனி மூலம் உள்ளே நாட்டினுள் வந்து பின்னர் மொத்த நாட்டையும் எடுத்துக் கொண்டு வெள்ளையன் செய்த அடிமைத்தனமும் பொருளாதார சுரண்டலும் இருக்கும். ஆனால் ஆயிரமாண்டுகளாக, சொந்த நாட்டு மக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் குறித்தும் , சாதிரீதியான அடிமைத்தனமும், அதன் பொருட்டு எழுந்த சமூக விடுதலை போராட்டங்களும் அழிக்கப்பட்டிருக்கும்.

ராமர் மீது அதீத நம்பிக்கை கொண்டு அறவழிப் போராட்டம் நடத்திய காந்தியும், கோகலேவும், நேருவும் இருப்பார்கள். அதே சமயம் கடவுள் நம்பிக்கையற்று இடதுசாரி சிந்தனை கொண்டு ஆயுதப்போராட்டம் நடத்திய பகத் சிங்கும், சுக்தேவும் புறக்கணிக்கப்பட்டிருப்பார்கள். வட்டமேசை மாநாடு குறித்தும் உண்ணாவிரத போராட்டம் பற்றியும் கட்டாயம் இருக்கும். ஆனால் அது ஆங்கிலேயருக்கும் காந்திக்கும் ஏற்பட்ட மோதல் அல்ல, அதில் யாருக்கும் யாருக்கும் சிக்கல் ஏன் நடந்தது எப்படி முடிவடைந்து என்ற முக்கிய தொடர்பு துண்டிக்கப்பட்டிருக்கும்

காந்தி யாரால் எங்கு சுட்டுக்கொல்லப்பட்டார், என்பது இருக்கும். ஆனால் கோட்சே எந்த இயக்கத்தைச் சார்ந்தவர் அது எததனை முறை தடை செய்யப்பட்டது, எத்தனை முறை கொலைக்கு முயற்சித்தார்கள் காந்தியின் எந்த கருத்துக்காக அவர்கள் எதிர்த்தார்கள் என்பது விடுபட்டிருக்கும்வ ரைபடத்தில் காஷ்மீர் இருக்கும்...ஆனால் இன்று வரை ஐ.நா அதை சர்ச்சைக்குரிய பகுதியாகத்தான் கொண்டிருக்கிறக்கிறது என்பதோ, 1947-ல் பல நிபந்தனைகளோடே இந்தியா தற்காலிகமாக ஒருங்கிணைத்து கொண்டதோ, நேரு கொடுத்த வாக்குறுதியோ, அது எந்த சிறப்பு அம்சங்கள் கொண்டது என்பது மறைக்கப்பட்டிருக்கும்

வேதாரண்யத்தில் இராஜாஜி காய்ச்சிய உப்பு சத்தியாகிரகம் பற்றி இருக்கும். அவர் பரிந்துரைத்த புதிய கல்விக்கொள்கையோ அதன் உள் நோக்கத்தை சரியாக ஆராய்ந்து அதைக் குலக்கல்வித் திட்டம் என அம்பலப்படுத்தி மக்களிடம் கொண்டு சென்ற தந்தை பெரியார் மறைக்கப்பட்டிருப்பார்

மெக்காலே கல்வித் திட்டம், அது மனப்பாட கல்விமுறையை ஊக்குவித்து குமாஸ்தாக்களை உருவாக்கியது பற்றி இருக்கும். ஆனால் கல்வி மறுக்கப்பட்டு, உடலுழைப்பு மட்டுமே செய்த மக்களை பெருமளவில் சென்றடைந்த அதன் புரட்சிகர எல்லையற்ற விச்சு காணாமல் போயிருக்கும்.

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம், சைமன் கமிசன், அந்தக் குழுவில் ஆங்கிலேயர்கள் மட்டுமே இருந்ததால் எதிர்க்கப்பட்டது பற்றி இருக்கும். ஆனால் அது சாதியின் அடிப்படை குறித்து ஆய்வு செய்ய முற்பட்டதையோ அதனால் கணக்கெடுப்பு கூடாது என்பதற்காக எதிர்க்கப்பட்டது என்ற முக்கிய செய்தியைச் சொல்லாது.

விவேகானந்தரின் *"Brothers and Sisters of America"* சிகாகோ பேச்சு பற்றி பக்கம் பக்கமாக பேசும். ஆனால் இந்து மத அடிப்படையையே உலுக்கும் அம்பேத்கர் பேச இருந்து பின்னர் *"Annihilation of Caste"* என்ற புத்தகம் வெளிவந்தது பற்றி மவுனமாக இருக்கும்

ஆசிரியராக இருந்து பின்னர் ஜனாதிபதியாக உயர்ந்த ராதாகிருஷ்ணன் பற்றி இருக்கும் ஆனால் எளிய மக்களுக்காக கல்வி கொடுத்த ஜோதிபாய் புலே, தேவதாசி குலத்தில் இருந்து வந்த முதல் டாக்டரான முத்துலட்சுமி அம்மையார் பெருமைகளை சிலாகிக்காது

பெரும்பான்மையான மக்கள் இந்தி பேசுவார்கள், விந்திய மலைக்கு மேலே எல்லாருக்கும் தாய் மொழி அதுதான் என்ற மாய பிம்பத்தைக் காட்டும். ஆனால் அது வெறும் மத்திய அரசின் அலுவல் மொழி என்றோ, 15-20% மக்கள் மட்டும் பேசும் மொழி என்றோ, மற்ற 22 அங்கிகரிக்கப்பட்ட மொழிகள் உள்ளன என்ற அழுத்தமோ இருக்காது

குடியியல்(civics) பகுதியில் அரசமைப்பு, அரசாங்கத்தின் கடமைகள் மற்றும் குடிமக்களின் உரிமைகள் குறித்து இருக்கும். ஆனால் அதை வடிவமைக்கும் போது ஏற்பட்ட சிக்கல்கள் என்ன, செயற்குழுவின் தலைவர் யார் என்பது "பெயருக்கு" கூட இடம்பெறாது.

நிற்க....(அட சும்மா குப்புற படுத்துட்டு கூட படிங்க...)

அமெரிக்காவுக்கு புதிதாக வருபவர்களிடம் "கார் ஓட்டத் தெரியுமா?" என்று கேட்பார்கள். தெரியாது என்றால் மிகவும் நல்லது என்பார்கள். ஏனென்றால் அப்போதுதான் முதலிலேயே சரியான முறையில் கற்க முடியும் என்பதற்காக. இதையெல்லாம் பார்த்தால் பள்ளியில் ஒழுங்காக வரலாறு படிக்காதது கூட நல்லதுக்கே என்ற முடிவுக்கு வரத்தோன்றுகிறது.

இறுதியாக, இதுநாள் வரை மிக முக்கியமாக நம் பள்ளிப்பாடத்தில் இருந்த ஒன்று, படித்து எப்போதும் நினைவில் வைத்திருக்கும் ஒன்று, மிகவும் தேவையான ஒன்று, ஆனால் இனி இருக்கப்போவதில்லை.....அது....

வேற்றுமையில் ஒற்றுமை !




இயக்குநர் கோபி நயினார்




# The Chokehold

India which has been long associated with its pluralism and secularism is slowly starting to disintegrate to form a different type of nation. A nation where Hindu ideologies and Hindutva rule the day. Through this singular effort the present government aims to create a one country, one language, one religion, one god. This is where the serious threat for freedom of expression and speech comes into play. Though this is secured under Articles 19 through 22 in the Constitution, this freedom has been under attack for a long time now.

As a fundamental human right, freedom of speech is up there with equality/ right of freedom to religion/ right against exploitation and et al., all forming a crux to build a better society. All of these rights and many more that we have or speak of were achieved by the collective freedom of expression. We have come a long way from the past where everyone was not allowed to vote or to study, where slavery was rampant, where property rights did not exist.




## Accidental or incidental?

One may wonder if free speech is really under threat in India. Look no further. Below are only few of the most recent and shocking instances where citizens have been ordered to remain silent or be silenced. Life is the ultimate price many have paid for their words.

Protesting against superstitions and black magic cost Narendra Dabholkar his life in 2013. Hindutva critic M.M. Kalburgi was shot dead in 2015 followed by Communist leader Govind Pansare. 2017 saw the death of prominent Indian writer Gauri Lankesh for raising a voice against casteism and Hindutva.

Along with these murders, eminent writer Perumal Murugan was issued serious threats in 2014 by Hindu extremists for the novel Mathorubagan which he authored in 2010. Demanding unconditional apology from the writer, they pushed Perumal Murugan to give up writing and declare his death as a writer.

2017 marked another example of this when Viduthalai Chiruthaigal Katchi leader Thol.Thirumavalavan was said to have made statements that angered Hindu extremists again. A right wing activist even offered a reward of Rs. 1 Crore for Thiruma's head. Prior to Thiruma's incident, Valarmathi, a student was remanded for distributing pamphlets against Central Government projects in Nuvasal and Kathiramangalam. Later she was detained against Goondas Act.

> *Unless we join together to protect all voices, we will end up losing our own.*


More recently Lyricist Vairamuthu was under BJP's radar for his remarks on Andal and actress Deepika Padukone and filmmaker Sanjay Leela Bhansali were issued death threats regarding the release of their movie Padmavat. In similar fashion Tamil movie Mersal ran into legal issues relating to removal of scenes about GST. A plea was filed in Madras High Court to revoke the censor certificate of Mersal. Cartoonist Bala was charged with publishing defamatory and obscene material – all due to a image he created to highlight the plight of debtors against high interest charging loansharks.

Does freedom of speech really exist?

In some ways, yes. It lies within the right wing extremists and conservative groups who now use this freedom to politically correct and control all those who are not in tandem with their own idealogies and dogmas. By and large this control is supported by the existing government and also endorsed periodically – either by their blatant silence and non-objection to atrocities or by flexing their power to reiterate who is on top.

## Why Freedom of speech?

Expression or the right to express gives a person courage to voice their thoughts and opinions without fear and hesitation. This freedom is instrumental in enabling self-development and gives birth to a person's participation in mainstream politics. While we have made it obvious that this freedom is crucial to maintain both




> *The rise of conservative religious ideologies coupled with a failure to protect religious minorities, marginalized communities make India a perfect hell for free speech and expression.*

independence and dignity, it also encourages rationalism.

Take a look at the family setup of today's India. How many children are being taught that free expression is an important life skill? How many parents encourage their children to speak up and question openly? We can all vouch for restriction of some sort. It may be covered with phrases ranging from "don't question your elders" to "you are so arrogant that you have to question everything". Unless this chain is broken at a family level there will be huge undercurrents of tension, fear, anger and resentment.

Moving to a broader perspective puts society in the spotlight. Freedom of speech and expression is essential to spread the right information and forms a part of the healthy development process of any nation. If there is anything history has taught us then it could be one wrought with misinformation, cover ups and blatant lies in some cases. Although not all history is marred by this lack of speech or freedom, numerous incidents or people have been changed and altered over the years to support or move forward either a political or economical cause across the world. If free speech is scuttled there will no growth to sustain and no history to write. The one who does not know history, will not create history.

The importance of free speech in any setup (democracy notwithstanding) cannot be stressed enough. Any idea, information or criticism should reach all corners. The moment this is withheld or stopped at certain junctures, a nation ceases to be a democracy. When no political action is possible, when no resistance to injustice or oppression is encouraged, when the single most important political right of the citizens is marred, the country automatically joins the ranks of other autocracies.

Neither the government nor elections will hold any meaning.

## Under Modi Government?

Many observers and political critics have described the decline in quality of freedom of expression in India since Modi took office in 2014.

In 2017, the World Press Freedom Index showed that India slipped 3 positions from the previous year and ranked 136 out of 179 countries. In India alone, more than 375 incidents including 11 deaths, 72 attacks and 77 internet shutdowns have occurred. Of these 77 internet shutdowns, Kashmir alone totals for 40.

To give one a full rundown of where and how India stands under the Modi Govt we can provide figures to attest the oppression of free speech. On the Economist Intelligence Unit Democracy Index 2017, India dropped 10 places and went from being 32nd to 42nd rank. A country that prides itself on being called one of the world's greatest democracy did not score well even in the media index where it is ranked at the 49th place. Today India is considered to be one of the most dangerous places to be a journalist. The rise of conservative religious ideologies coupled with a failure to protect religious minorities, marginalized communities make India a perfect hell for free speech and expression.

## How India discriminates:

Much like the dichotomy that exists in most things, India has created a 2-way method to kill free speech. The government for its part unleashes this with laws and power by arresting hapless critics, slams defamation cases, bans events and restricts rallies or conferences.






Anything it does not agree with will be held back and much worse destroyed. A much cruder, if not worse way to handle journalists or critics is by engaging extremists or Goondas who attack and kill in many cases for expressing their views.

Under the Modi Govt, India has continually faced a lack of access to freedom of speech and expression. While Modi's style of politics focuses on conservatism, the right wing forces in a secular country does nothing to enhance the unity in diversity concept that India has long taken pride in. Violence increases unchecked among the press field and minority communities just so they can be kept in check.

Free speech as we have witnessed time and again enables citizens to follow, understand, question and critique their elected representative. Quelling this has now resulted in BJP taking the lead in 14 states since 2014.

While political pundits may very well call this a clear win for Modi and his ideologies, it also goes to show how much of a country is forced to think within a given box.

**Where to now?**

Even with freedom of speech and expression part of our right and constitution, India struggles to provide this to each and every citizen of hers. There is no one-two step program to enable free speech. As a country, as a culture and as one-third of the world's population, India and its citizens must be open and broad minded to accept criticism. Tolerance does not mean having 29 states in India. It means accepting and allowing all 29 to thrive independently and as one.

Change is the only way forward. Every citizen must be aware of their rights and must voice their opinions. Start within your own family. Allow children to question and do not thwart their ideas or thoughts. These are what move humanity forward. The moment the why's and how's disappear the desire to learn and grow die as well. In the end all we will be left with are sheeple.

*Tolerance does not mean having 29 states in India. It means accepting and allowing all 29 to thrive independently and as one.*

Everyone has the right to freedom of opinion and expression; this right includes freedom to hold opinions without interference and to seek, receive and impart information and ideas through any media and regardless of frontiers - Universal Declaration of Human Rights

Never forget that freedom of speech is the single most important political right of every citizen. It is not and never should be considered a privilege. It is our fundamental right.

Unless we join together to protect all voices, we will end up losing our own.

**-Vader**


BODHI
PSYCHOMETRIC ASSESSMENT
Most teenagers fail to express themselves openly.
Bodhi helps you and your parents in your teen journey..
Don't walk alone
Counseling is available for studies, career,relationships, behaviour, self development and much more.
Contact us at:
+91 44 4852 1962
+91 44 2654 1447
bodhi@bodhi.co.in
To register:
www.bodhi.co.in
www.olc.bodhi.co.in